# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. I Issue 1 April 2011

இம்மாத மலரில்....

பொருளடக்கம்

பக்கம்

இம்மாதச் செய்தி ........ 2

தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ........ 3

மதர்ஸ் சர்வீஸ் சொசைட்டியின் 40ஆம் ஆண்டு நிறைவு விழா ........ 4

அன்பர் கடிதம் ........ 14

லைப் டிவைன் ........ 16

அஜெண்டா ........ 24

அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ........ 27

சாவித்ரி ........ 37

யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 39

பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 51

வாழும் தெய்வங்கள் ........ 54

லைப் டிவைன் - கருத்து ........ 61

அன்பர் கடிதம் ........ 64

❋❋❋

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

உழைப்பால் வந்ததைக் கொடுக்க முடியாதவன் கருமி.

தன் உழைப்பின்றி பெற்றதை எளிதில் தருவது பெருந்தன்மை.

ஆயுள் முழுவதும் அறிவு சேகரம் செய்வதை ஆழ்மனம் நொடியில் காட்டவல்லது.

மனம் சத்தியஜீவியத்தைப் புரிந்து கொண்ட மாத்திரம் சத்தியஜீவியமாகும்.

தன்னம்பிக்கைக்குக் களைப்புண்டு. தெய்வ நம்பிக்கைக்கு இல்லை.

## இம்மாதச் செய்தி

**பகவானை அறியாத**

**மகான்**

**உலகிலில்லை.**



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

201. *சொல்லி செய்தவனில்லை;*

*சொல்லாதவன் செய்யத் தவறியதில்லை.*

**சொல்லாதவனும், சொன்னவனும் செய்யும் மௌனம்.**

202. *காசியில் கலம் விளைந்தால், எனக்கென்ன?*

**எங்கு விளைந்தாலும் எனக்கு விளைந்ததாகும்.**

203. *பசிக்குப் பனம்பழம் தின்றால், பித்தம் போற வழி போகும்.*

**பித்தத்தை மாற்றும் பனம்பழம்.**

204. *ஏழை சொல் அம்பலம் ஏறாது.*

**எளியவன் சொல்லை ஏற்கும் அம்பலம்.**

205. *வருமுன் காப்போம்.*

**பாதுகாப்பு எப்பொழுதும் உள்ளது.**

*தொடரும்....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**தன்னால் முடியாது என்றறிந்து, அடக்க முடியாத வேகம் மாற ஒத்துக்கொண்டு, முதலில் கணக்குப் போட முயலும்.**

# மதர்ஸ் சர்வீஸ் சொஸைட்டியின் 40ஆம் ஆண்டு நிறைவு விழா

N. அசோகன்

மதர்ஸ் சர்வீஸ் சொஸைட்டி 40 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற இந்நன்நாளில் மதர்ஸ் சர்வீஸ் சொஸைட்டியின் இந்த 40 வருட சாதனைகளைப் பற்றி உங்களோடு பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது பற்றி மிக்க மகிழ்ச்சி. ஸ்ரீ அப்பாதான் MSS, MSSதான் அப்பா என்றும் நாம் சொல்லலாம். ஸ்ரீ அப்பாவினுடைய செயல்பாடுகளுக்கு ஒரு ஸ்தாபன வடிவம் கொடுக்கப்பட்டதுதான் MSS என்று சொன்னால் அது மிகவும் பொருத்தமாக இருக்கும். MSS தியான மையங்களை நடத்துகிறது. அன்னை மற்றும் பகவான் ஸ்ரீ அரவிந்தருடைய கருத்துகளைப் பற்றிய புத்தகங்களை வெளியிடுகிறது என்றுதான் பெரும்பாலான அன்பர்களுக்குத் தெரியும். ஆனால் MSSனுடைய செயல்பாடுகளில் அது ஒரு அம்சம்தான். இதுபோக MSSக்கு விவசாயம், ஆராய்ச்சி மற்றும் பள்ளிக்கூடம் என்று கூடுதல் அம்சங்கள் இருக்கின்றன. இந்த கூடுதல் துறைகளில் எல்லாம் MSS என்ன சாதனை புரிந்திருக்கிறது என்று உங்களோடு செய்திகளை இந்நேரம் பகிர்ந்து கொண்டால் இந்த ஆண்டு விழா வைபவத்திற்குப் பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது.

அன்னை மற்றும் பகவானுடைய லட்சியங்கள் மற்றும் கனவுகளோடு ஸ்ரீ அப்பா தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டதால் இந்த லட்சியங்களுக்கு உயிர் கொடுக்கும் வகையில் தன்னால் என்ன சேவை செய்ய முடியுமோ அந்தச் சேவையை செய்வதற்காகத்தான் 1970ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17ஆம் தேதி ஸ்ரீ அப்பா MSSஐ நிறுவினார்.



பகவானுடைய லட்சியங்களில் இந்தியா சுதந்தரம் பெற வேண்டும் மற்றும் ஆசிய நாடுகளுக்கும் விடுதலை கிடைக்க வேண்டும் என்ற இரண்டு கனவுகள் நினைவாகிவிட்டன. மேலும் மூன்று கனவுகள், அதாவது உலக ஒற்றுமை மற்றும் உலகத்திற்கு இந்தியா ஆன்மீகத் தலைமை தாங்குதல், சத்தியஜீவிய மனிதனின் பிறப்பு, மற்றும் சத்தியஜீவிய வெளிப்பாடு ஆகிய மீதி மூன்று கனவுகளும் முழுமை பெறாமல் உள்ளன. இந்த இலட்சியங்கள் நடைமுறையில் நிஜமாவதற்கு ஸ்ரீ அப்பா தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். இந்த இலட்சியங்களை விரைவுபடுத்த தன்னால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வதைத் தான் அன்னைக்குச் செய்யும் சேவையாக எடுத்துக் கொண்டுள்ளார் என்றும் கூறலாம்.

உலக ஒற்றுமையோ, இந்தியாவின் ஆன்மீகத் தலைமையோ அல்லது சுபிட்சமோ வெறும் ஜீவன் இல்லாத திட்டங்கள் இல்லை. உயிருள்ள திட்டங்கள்தான். உலக ஒற்றுமையை வலுப்படுத்தும் திசையில்தான் இன்று உலகமும் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே உலகத்தின் போக்கை சரியாக புரிந்து கொள்பவர்களுக்கு இது ஒரு முடியாத காரியம், நடைமுறைக்கு ஒத்து வராத கனவு என்று தோன்றாது. அன்னையின் அருளை நம்பி இந்த இலட்சியத்திற்காகப் பாடுபடுபவர்களுக்கு இது பலிக்கக்கூடிய விஷயம்தான் என்று நாம் உறுதியாக நம்பலாம். இது பலிக்கக்கூடிய விஷயம் என்று நான் ஏன் சொல்கிறேன் என்றால் அதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. உலக ஒற்றுமைக்குப் பெரிய தடையாக விளங்கிய 45 வருட கால அமெரிக்க, ரஷ்ய Cold War என்று சொல்லப்படுகின்ற ஜனநாயக நாடுகளுக்கும், கம்யூனிச நாடுகளுக்கும் இடையே இருந்த பனிப்போர் யாரும் எதிர்பார்க்காத வகையில் 1990இல் முடிவுக்கு வந்தது. இதன் விளைவாக கம்யூனிச ஆதிக்கத்தில் இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அதிலிருந்து விடுபட்டு, ஜனநாயக ரீதியாக செயல்படுகின்ற மேற்கு

ஐரோப்பிய நாடுகளை நெருங்கி வந்துள்ளன. இதனால் ஐரோப்பிய ஒற்றுமை பல மடங்கு தீவிரம் அடைந்துள்ளது. மேலும் 1995ஆம் ஆண்டுக்கு மேல் Internet என்ற ஒரு புதிய விஷயம் உலகத்தில் பிறந்துள்ளது. இந்த Internet புரட்சி உலக வரலாற்றில் இதுவரை பார்க்காத அளவிற்கு உலக நாடுகளைத் தகவல் தொடர்பு, தொழில் மற்றும் வியாபாரத் தொடர்பு, பயணத் தொடர்பு, அரசியல் தொடர்பு என்று எல்லா வகையிலும் ஒன்றுபடுத்தியுள்ளது. இம்மாதிரியான முன்னேற்றங்களை மனதில் வைத்துப் பார்க்கும் பொழுது அன்னை அன்பர்கள் உலக ஒற்றுமைக்கு ஆர்வமாக உழைத்தார்கள் என்றால் உலகம் எதிர்பார்ப்பதைவிட மேலும் விரைவாகவே உலக ஒற்றுமை நிஜமாகிவிடலாம் என்று நம்பலாம்.

இந்தியா உலகத்தின் ஆன்மீக குருவாகத் தலையெடுப்பதற்கு முன்னால் இந்நாடு சுபிட்சம் பெற வேண்டும். அப்படி இந்நாடு வளம் பெறுவது என்பது நாம் பாரதமாதாவிற்குச் செய்கின்ற தலைசிறந்த சேவையாகும். பல வருடங்களுக்கு முன்னால் ஸ்ரீ அப்பாவிற்கு நெருக்கமான ஒரு அன்னை அன்பர் அவருடன் உரையாடிக் கொண்டிருந்த பொழுது ஸ்ரீ அப்பா அவர்கள் அவரிடம், ''இந்த நாட்டைப் பற்றிய சிந்தனைதான் என் மனதில் மேலோங்கி இருக்கிறது. நான் எதிர்பார்க்கும் சுபிட்சம் இந்த நாட்டிற்கு வந்தால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்'' என்று சொன்னாராம். இப்படி அவர் மனதில் இடம் பெற்றுள்ள இந்த நாட்டின் சுபிட்சத்திற்குச் சேவை செய்வதை அவர் தமது தலையாய கடமையாக எடுத்துக் கொண்டுள்ளார்.

அமெரிக்காவிற்கு இணையாக வளமையையும், சுபிட்சத்தையும் இன்னும் 20 வருடங்களில் இந்தியாவில் நாம் பார்க்கலாம் என்று ஸ்ரீ அப்பா அவர்கள் அடிக்கடி சொல்வதுண்டு. அதற்காக நம்முடைய பழைய கலாச்சாரத்தையும், அதனுடைய சிறப்பம்சங்களையும் இப்படியே ஒதுக்கிவிட்டு, மேலை நாட்டு ஐஸ்வரியத்தோடு மேலை நாட்டு கலாச்சாரத்தையும் நாம்



கண்மூடித்தனமாக பின்பற்ற வேண்டும் என்று அவசியமில்லை. நம் நாட்டு ஆன்மீக மற்றும் கலாச்சார சிறப்புகள் கெடாதவாறும், அதே சமயத்தில் அவை மேலும் மிளிரும் வண்ணம் மேலை நாட்டு ஐஸ்வரியத்தை எப்படி நம் நாட்டிற்குள் கொண்டு வருவது என்றும் ஸ்ரீ அப்பா அவர்கள் நிறைய சிந்தித்துள்ளார்.

அன்னையிடம் வந்த எண்ணற்ற பக்தர்களில் அவருடைய ஆசிகளைப் பெற்று, அவருடைய அருளின் பலனாக தமக்குள்ள பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று வந்தவர்கள்தான் அதிகம். ஏதோ ஒரு சிலர்தான் அன்னையிடம் பெற்றுக் கொண்ட பலன்களுக்கு கைம்மாறாக அன்னைக்குச் சேவை செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். இப்படி விரும்பிய ஒரு சிலருள் ஸ்ரீ அப்பா அவர்களும் ஒருவர்.

1970இல் MSSஐ நிறுவிய பின்பு விவசாயத்தின் மூலம்தான் அவர் அன்னைக்குச் சேவை செய்ய விரும்பினார். மதர் எஸ்டேட் மற்றும் Beauty Land என்ற இரண்டு முந்திரி தோப்புகளை கடலூருக்கு அருகேயுள்ள இராமாபுரம் கிராமத்தில் வாங்கினார். முந்திரி விளைச்சலில் நல்ல வருமானத்தைப் பார்த்து, அதை அன்னைக்குக் காணிக்கையாக கொடுக்க வேண்டும் என்று விரும்பினார். தோப்பில் வேலை செய்ய வந்த கிராமத்து மக்களின் ஏழ்மையைக் கண்டு, அவர்கள் மேல் ஒரு பரிவு கொண்டு, அவர்களுக்கும் பயிர் செய்வதற்கும், கிணறு வெட்டுவதற்கும், Crop Loan மற்றும் Borewell Loan எல்லாம் ஸ்டேட் பாங்க் மூலம் கிடைக்க ஏற்பாடு செய்தார். அந்த முயற்சி பெருவெற்றி பெற்று, அந்த கிராமத்து மக்களுடைய வருமானம் பல மடங்கு பெருகியது. இவர்களுக்கு வந்த முன்னேற்றத்தைக் கண்டு சுற்று வட்டாரத்தில் உள்ள மற்ற கிராமத்திலுள்ள விவசாயிகளும் அவர்கள் சொந்த செலவிலேயே borewell எல்லாம் போட்டுக் கொண்டு கம்பு, கேழ்வரகு என்று மழைக் காலப் பயிர்களைக்

கைவிட்டுவிட்டு ஸ்ரீ அப்பா அவர்களைப் போலவே வாழை, கரும்பு என்று பணப்பயிர்களுக்கு மாறினார்கள். இராமாபுரத்தில் செய்தது வெற்றிகரமாக அமைந்ததால் ஸ்டேட் பாங்கு அதோடு நிற்காமல் அடுத்த 10 வருடங்களில் இந்தியாவில் எண்ணற்ற கிராமங்களில் Village Adoption Schemeஐ கொண்டு வந்து இந்தியாவின் விவசாய வளர்ச்சியையும், விவசாயிகளின் வருமானத்தையும் பல மடங்கு மேம்படுத்தியது. இன்று கடலூர் மாவட்டத்தில் இராமாபுரம் கிராமம் விவசாயத்தில் முன்னிலையில் இருக்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் ஸ்ரீ அப்பா அவர்கள் 1970இல் அவர்களுக்கு காட்டிய வழிதான்.

அடுத்ததாக ஸ்ரீ அப்பா அவர்களின் கவனம் Business Management என்ற துறையின் பக்கம் திரும்பியது. அன்னை ஸ்ரீ அரவிந்தருடைய ஆன்மீக தத்துவங்களிலிருந்து நம் நடைமுறை வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கு நிறைய கருத்துகளை நாம் எடுத்துக் கொள்ள முடியும் என்று ஸ்ரீ அப்பா அவர்கள் திடமாக நம்பினார். அதாவது உயர்ந்த ஆன்மீக உண்மைகளை நடைமுறை வாழ்க்கைக்கு உதவக்கூடிய guidelinesஆக மாற்றிக்கொள்ள முடியும் என்று அவருக்குத் தெரிந்தது. சமூகம் எப்படி முன்னேறுகிறது, பரிணாம வளர்ச்சி எப்படி நிகழ்கிறது, ஆன்மீக கருத்துக்களை பொருளாதாரத் துறையோடு இணைத்து பொருளாதார வளர்ச்சியை எப்படி மேம்படுத்தலாம் என்றெல்லாம் ஸ்ரீ அப்பா அவர்கள் சிந்திக்க ஆரம்பித்தார்.

அப்படிச் சிந்திக்க ஆரம்பித்தவர் Consciousness Approach to Management என்ற ஒரு புதிய Management Theory மற்றும் அணுகுமுறையை உருவாக்கினார். ஸ்ரீ அப்பா அவர்களிடமிருந்து Mr. Garry Jacobs அவர்கள் இதைக் கற்றுக் கொண்டு அமெரிக்க Management Associationஉடைய Vice-Presidentஆக பணியாற்றிக் கொண்டிருந்த Mr. Fred



Harmon என்ற Management நிபுணரிடம் இந்தப் புதிய அணுகுமுறைகளைப் பற்றி எடுத்துரைத்தார். In Search of Excellence என்ற தலைப்பில் Tom Peters என்பவர் Management பற்றி எழுதிய புத்தகம் வெளிவந்த நேரம் அது. 1980ஆம் ஆண்டு அளவாக இருக்கலாம். இந்த புத்தகம் மிகவும் பிரபலமாகி எல்லோருடைய கவனத்தையும் அது ஈர்த்திருந்தது. அந்த நேரத்தில் Mr. Garry Jacobs அவர்கள் Consciousness Approach என்ற புதிய கருத்தை Mr. Fred Harmon அவர்களிடம் பேசிய பொழுது அவரும் இந்தக் கருத்துக்களை மிகவும் பாராட்டி இந்த கருத்துகளின் அடிப்படையில் Management புத்தகம் எழுதினால் அதற்கு நல்ல வரவேற்பு இருக்கும் என்று யோசனை தெரிவித்தார். உடனே Mr. Garry Jacobs அவர்களும் Mr. Fred Harmon அவர்களும் Coca Cola, IBM, Federal Express, Apple Computers போன்ற பல பெரிய Corporationகள் எப்படி வளர்ச்சி அடைந்துள்ளன என்பதை Consciousness Approach to Management என்ற Theoryயின் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து Vital Difference மற்றும் Vital Corporation என்ற இரண்டு புத்தகங்கள் எழுதினார்கள். இந்த புத்தகங்களில் Business நிறுவனங்கள் எப்படி தம்முடைய லாபத்தை 5 வருடங்களில் இரட்டிப்பு ஆக்கிக் கொள்ளலாம் என்று விரிவாக எடுத்துரைத்துள்ளார்கள். இந்த புத்தகங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்து, Mr. Garry Jacobs and Mr. Fred Harmon இருவருக்கும் நல்ல Consultancy வாய்ப்புகளும் கிடைத்தன.

Business எப்படி வளர்கிறது என்று சிந்திக்க ஆரம்பித்த ஸ்ரீ அப்பா அவர்கள் அடுத்த கட்டமாக சமூகம் எப்படி வளர்கிறது, சமூகத்தில் பொருளாதார வளர்ச்சியை எப்படி மேம்படுத்தலாம், சமூகத்தின் முன்னேற்றத்தில் முன்னோடிகளின் பங்கு என்ன? சமூக வளர்ச்சியினுடைய பல்வேறு கட்டங்கள் என்னென்ன என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்தார். இப்படிச் சிந்தித்ததின் பலனாக Theory of Social Development and its Principles என்ற ஒரு

புதிய Theory Systemஐ கண்டுபிடித்தார். உலகப் பொருளாதார நிபுணர்களிடம் இந்த புதிய Development Theoryஐப் பற்றி எடுத்துரைப்பதற்கு வாய்ப்புகளை சொஸைட்டியில் நாங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம். நம் நாட்டில் இந்த Theoryயின் சிறப்புகளை பற்றி M.S. Swaminathan, கோவையில் உள்ள TNAU விவசாய பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் Dr. G. ரங்கசாமி, காலஞ்சென்ற மத்திய நிதியமைச்சர் சி. சுப்ரமணியம், காலஞ்சென்ற இந்திரா காந்தி அம்மையார் மற்றும் நரசிம்மராவ் ஆகியோர்களிடம் எல்லாம் பேசியிருக்கின்றோம். இந்திரா அவர்கள் பிரதமராக இருந்தபொழுது இந்தியப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக 137 திட்டங்களைப் பட்டியலிட்டு வழங்கினோம். இப்படி வழங்கிய திட்டங்களில் பலவற்றை மத்திய அரசு உடனடியாக ஏற்றுக் கொண்டு அமுல்படுத்தியது.

இப்படி இந்திய தலைவர்களிடம் எடுத்துச் சொல்ல வாய்ப்பு கிடைத்தது போல் வெளிநாட்டு விஞ்ஞானிகள், அரசியல் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள் ஆகியோர்களிடம் எல்லாம் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்குமா என்று பார்த்துக் கொண்டிருந்தோம். இந்த நேரத்தில்தான் World Academy of Arts and Science என்ற சர்வதேச ஸ்தாபனத்தினுடைய Presidentஆக பணியாற்றிக் கொண்டிருந்த Mr. Harlan Cleveland என்ற ஒரு அமெரிக்க பிரமுகரின் அறிமுகம் Mr. Garry Jacobs அவர்களுக்கு கிடைத்தது. இந்த Development Theory பற்றி Mr. Garry Jacobs அவர்களிடம் கேட்டு, அவர் அதனால் பெரிதும் ஈர்க்கப்பட்டு, 1998ஆம் ஆண்டு Canadaவிலுள்ள Vancouver மாநகரத்தில் நடந்த அவர்களுடைய ஸ்தாபனத்தினுடைய மாநாட்டில் Development Theoryஉடைய சிறப்பம்சங்களைப் பேசுவதற்கு ஒரு தனி Sessionஐ ஏற்படுத்தி வாய்ப்பளித்தார். அன்று World Academyயுடன் ஏற்பட்ட உறவு இன்றுவரை படிப்படியாக வளர்ந்திருக்கிறது. இந்தக் கடந்த



12 வருடங்களில் நியூயார்க் நகரம், வாஷிங்டன் டி.சி., புதுடில்லி மற்றும் ஐரோப்பாவிலுள்ள Croatia நாட்டின் தலைநகரமான Zagreb என்ற பெருநகரங்களில் MSSஉடன் இணைந்து உலக அமைதி, போர் நிறுத்தம், அணு ஆயுத ஒழிப்பு, உலகத்தின் வருங்கால முன்னேற்றம் என்ற தலைப்புகளிலெல்லாம் கருத்தரங்குகளை நிகழ்த்தியுள்ளனர். இந்த கருத்தரங்குகளின் பலனாக சர்வதேச அளவில் MSSனுடைய செயல்பாடுகளைப் பற்றி தகவல்கள் பரவி இருக்கின்றன.

இதற்கிடையே 1989ஆம் ஆண்டு உலகத்தில் அமைதியை நிலைநாட்டவும், பஞ்சம், பட்டினியை ஒழிக்கவும் International Commission of Peace and Food என்ற ஒரு சர்வதேச Commissionஐ ஸ்ரீ அப்பா அவர்கள் நிறுவ விரும்பினார். பிரபல இந்திய விவசாய விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனை இந்தக் குழுவிற்குத் தலைமை ஏற்கும்படி Mr. Garry Jacobs அவர்கள் கேட்டுக் கொண்டார். அவரும் ஆர்வமுடன் சம்மதித்தார். பல்வேறு நாட்டிலிருந்து பல பெரிய விஞ்ஞானிகளும், நிபுணர்களும் இதில் உறுப்பினர்களாக பங்கேற்றார்கள். இந்தக் குழுவினுடைய ஒரு கருத்தரங்கு USSRஇல் கோர்பச்சேவ் அவர்கள் அதிபராக இருந்த பொழுது மாஸ்கோவிலேயே நடந்தது. கமிஷன் உறுப்பினர்கள் அவர் பதவியிலிருந்து விலகியபின் அவரையே நேரடியாகச் சந்தித்து கருத்தரங்கில் என்னவெல்லாம் பேசினார்கள் என்று ஒரு நேரடி Report வழங்கினர். 1994ஆம் ஆண்டு கமிஷனுடைய Reportஐ Uncommon Opportunities என்ற தலைப்பிட்ட புத்தகமாகவே வெளியிட்டு, அந்நேரம் யுனைட்டட் நேஷனில் செகரட்டரி ஜெனரலாக பணியாற்றிக் கொண்டிருந்த Mr. Boutros Ghali என்பவரிடம் குழு உறுப்பினர்கள் ஒரு பிரதியை வழங்கி, Report release செய்தார்கள்.

Business Management மற்றும் Development Studies

ஆகிய இரண்டு துறைகளையும் தவிர ஸ்ரீ அப்பாவிற்கு என்றுமே கல்வித் துறையின் மேல் தனி ஈடுபாடு ஒன்றுண்டு. ஆரம்பக் கல்வியிலிருந்து கல்லூரிக் கல்வி வரை இந்நாட்டு கல்வி முறைகளைச் சீர்திருத்தி அமைத்தால் நாட்டின் வளர்ச்சிக்கு அது பெரிதும் உதவியாகவிருக்கும் என்று அவர் நம்புகிறார். குறிப்பாக மாணவ, மாணவியருடைய சிந்திக்கும் திறனைத் தூண்டும்படியும், அவர்களுடைய creative திறனை வளர்க்கும்படியும் அவர்களுடைய தன்னம்பிக்கை, பர்சனாலிட்டி, சுதந்தரமான செயல்பாடு ஆகியவற்றை ஊக்குவிக்கும்படியும் கல்வி திட்டங்களைச் சீர்திருத்த வேண்டும் என்று நெடுங்காலமாக வலியுறுத்தி வருகிறார். குறிப்பாக மழலையர் கல்வியைச் சீர்திருத்தி அமைத்தாலே நல்ல பலன் இருக்கும் என்றும் நம்பினார்.

அவருடைய நம்பிக்கைக்கு வடிவம் கொடுக்கும் வகையில் 2000 வருடத்தில் பிரிம்ரோஸ் என்ற பெயரில் மதர்ஸ் சர்வீஸ் சொஸைட்டியிலேயே ஒரு பள்ளியை நிறுவினார். இங்கு Flash Cards Systemஐ பயன்படுத்தி Pre-K.G. level உள்ள மழலையர்களுக்கே அவர்கள் சிந்தனையைத் தூண்டும் வகையில் கல்வி கற்பிக்கப்படுகிறது. சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பிரிம்ரோஸ் பள்ளி கடந்த 10 வருடத்தில் பத்தாவது வரையிலும் வளர்ந்து, புதுவை நகரத்தில் ஒரு தலைசிறந்த பள்ளி என்று பெயர் பெற்றுள்ளது. சென்னை அன்னை அன்பர் ஒருவர் இந்தப் பெயரில் சென்னையில் பிரிம்ரோஸ் என்ற ஒரு பள்ளியை நிறுவியிருக்கிறார். அம்பத்தூர் தியான மையத்தைச் சேர்ந்த அன்பர் ஒருவர் இதே Flash Card Systemஐ பின்பற்றி Buds and Blossoms என்ற ஒரு பள்ளியை நிறுவி, சிறப்பாக நடத்தி வருகிறார். இப்படி ஓரிரு இடங்களில் பிரிம்ரோஸைப் பின்பற்றி மற்ற பள்ளிகள் எழும்பியுள்ளன. இருந்தாலும் அகில இந்திய அளவில் Flash Card System of Education பரவ வேண்டும், எண்ணற்ற பிரிம்ரோஸ் பள்ளிகள் இந்தியாவில் எழும்ப வேண்டும்



என்பது ஸ்ரீ அப்பா அவர்களின் விருப்பம். இப்படி எண்ணற்ற பள்ளிகளை நிறுவுவதற்குப் போதுமான நிதி வசதி MSSஇல் இருந்தால் ஸ்ரீ அப்பா அவர்கள் உடனே செயல்படுவார். அன்னைதான் ஸ்ரீ அப்பாவினுடைய திட்டங்களை விரிவாக செயல்படுத்துவதற்குப் போதுமான நிதி வசதி MSSற்கு கிடைக்குமாறு செய்ய வேண்டும்.

MSSனுடைய விவசாய செயல்பாடுகள், Development செயல்பாடுகள், ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் கல்வித் துறையின் செயல்பாடுகளைப் பற்றி நான் இதுவரையிலும் பேசிவிட்டேன். மீதமிருப்பது MSSன் அன்னை பகவானைப் பற்றிய புத்தக வெளியீடுகளும், தியான மையச் செயல்பாடு-களும்தான். நீங்கள் எல்லோரும் அன்பர்களாக இருப்பதால் நான் இது பற்றி விவரமாகப் பேச வேண்டிய அவசியம் இல்லை. பேச வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், தியான மையங்களுடைய முக்கியத்துவம் எந்த வகையிலும் குறையவில்லை. MSS ஒரு பெரிய ஆலமரமாக வளர வேண்டுமென்றால் அந்த ஆலமரத்தைத் தாங்கிப் பிடிக்கும் விழுதுகளாக தியான மையங்களும் வளர வேண்டும். ஆலமரத்தின் பலம் என்பது அதன் விழுதுகளின் பலத்தைப் பொருத்தது. ஆகவே MSSன் ஆண்டு விழா நாளான இந்நன்னாளில் MSSஐ இன்னும் பெரிய ஆலமரமாக ஆக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு என் சொற்பொழிவை முடித்துக் கொள்கிறேன்.

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**ஒவ்வொரு கருவியும் பல பகுதிகளாலானது.**

## அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே!*
*ஸ்ரீ அன்னை அரவிந்தர் துணை!*

மதிப்புக்குரிய பேரன்புமிக்க ஸ்ரீ அப்பா அவர்களுக்கு அநேக நமஸ்காரங்கள்!

நாங்கள் குடும்பத்துடன் மடிப்பாக்கம் கைலாஷ் flatற்கு வந்து சுமார் பத்து, பன்னிரெண்டு வருடங்கள் ஆகிவிட்டன. இங்கு வந்த புதிதில் என் சிநேகிதி மாமி (மீனாக்ஷி மாமி) பெண் எங்கள் வீட்டிற்கு வந்து, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு பேசினாள். அவள் அம்மா சொன்னபடி வந்ததாகவும், உதவி கேட்டு வந்திருப்பதாகவும் சொன்னாள். அதாவது, தன் கணவருக்கு வேலை சரியாக இல்லாததினால் வருமானத்திற்கு கஷ்டப்படுவதாகவும், அதற்கு வழி தேட என்ன செய்யலாம்.... அப்பளம் செய்யலாமா, கரு வடாம் செய்து விற்பனை பண்ணலாமா.... யோசனை சொல்லுங்கள் என்று கேட்டாள். அவளைப் பார்த்து மனது கஷ்டப்பட்டது. அதே சமயம் அவளிடம் சற்று யோசித்துவிட்டு சொன்னேன், ''எனக்கு தெரிந்ததெல்லாம், ஸத்தியமே வடிவமான ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரைதான் தெரியும்'' என்று சொல்லி, ஒரு சிறு அன்னை ஸ்வாமி படம் ஒன்றை கொடுத்து, வழிபடும் முறையையும் சொன்னேன். அவள் சந்தோஷமாக வாங்கிக் கொண்டு, வழிபடவும் செய்தாள். சில மாதங்கள் கழித்து பார்த்த பொழுது, அவள் என்னிடம் சொன்னாள், ''நீங்கள் கொடுத்த படத்தை வைத்து பூஜை செய்து வருகிறேன். ஸ்ரீ அன்னை வழிகாட்டிவிட்டார். கோயில்களுக்கு பிரஸாதங்கள் (வடை, சக்கரை பொங்கல்) பலர் கேட்டபடி செய்து தருகிறேன். இப்பொழுது சௌக்கியமாக இருக்கிறேன்'' என்றும், இன்னும் சில வருடங்கள் கழித்து சொன்னாள், ''பெரிய வாடகை வீடு போயிருக்கிறேன். காட்டரிங் இருவருமாக நடத்தி வருகிறோம். பெயர் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் காட்டரிங்'' என்றும் சொன்னாள். இப்பொழுது பத்து நாட்களுக்கு முன்பு அவள் சொன்னதாக அவள் அம்மா சொன்னாள், ''தனி வீடு மாடியுடன் வாங்கிவிட்டதாகவும், தை மாதம் குடி போகப்போவதாகவும், கிரஹப் பிரவேசத்திற்கு எல்லோரும் கண்டிப்பாக வரவேண்டும்'' என்றும், ''ஸ்ரீ அன்னைதான் ப்ரத்யக்ஷ தெய்வம்'' என்றும் சொன்னதாகவும் சொன்னாள். மெய்சிலிர்த்து போய்விட்டேன்.

*-- லலிதா சேதுராமன், சென்னை*

❁❁❁

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**அடக்க முடியாது போனால் கணக்குப் போட முடிவதில்லை.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மாறும் நேரத்தில் அடுத்த நிலைக்குரிய விஷயம் இந்நிலையில் பலஹீனமாக இருக்கும். இந்நிலைக்குரிய விஷயமில்லாத நேரம், இந்நிலைக்குரிய தோற்றமே சாதிக்கும்.

***அடுத்த நிலைக்கு மாறும் நேரம் தோற்றமே முக்கியம்.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXI. The Ascent of Life

Life reaches the second stage. Page No.201
We recognize it as vitality. Para No.4
There is a contrary phenomenon.
It takes the lead.
There is the physical basis of vital ego.
It consents to dissolution.
Its constitutents are broken up.
There are the elements of life.
There are the elemental formation of others' lives.
One can be used to enter the other.
This law reigns to a great extent.
It is not yet fully recognized.
There is the mental life.
There is also the spiritual existence.
They must be organized as science of today.
The existence of Matter is there.



## 21. உயரும் வாழ்க்கை

வாழ்வு இரண்டாம் கட்டத்தை அடைகிறது.
அதைப் பிராணன், உயிர் என்கிறோம்.
இதற்கெதிரான நிலையுண்டு.
அதற்கு முனைப்பு எழுகிறது.
பிராணனின் அகந்தைக்கு உடல் அஸ்திவாரம்.
அது கரைய ஒத்துக் கொள்கிறது.
அதன் பகுதிகளை உடைக்கிறோம்.
அவை ஒரு வாழ்வின் பகுதிகள்.
மற்ற வாழ்வின் அடிப்படையான ரூபங்களுண்டு.
ஒன்று அடுத்ததனுள் நுழைய முடியும்.
இச்சட்டம் பெருஅளவுக்கு ஆட்சி செலுத்தும்.
இதை முழுவதும் உணரவில்லை.
மன வாழ்வுண்டு.
ஆன்மீக வாழ்வும் உண்டு.
அவை இன்றைய விஞ்ஞானம் போல அமைய வேண்டும்.
ஜடம் உள்ளது.

It is also organized.
Until such organization it cannot be recognized.
There is the life-existence of others.
There are the elements of our physical body.
There are those of the subtler vital being.
Similarly there are others.
They are as follows.
Life-energy, desire-energy are there.
Our powers, strivings, passions are there.
Broadly we can then enter others' lives.
It is so during our life.
It continues after our death.
We have an ancient knowledge.
It is an occult knowledge.
It says we have a vital frame.
We have a physical frame too.
This too is dissolved after death.
It lends itself to the constitution of other vital bodies.
We have our life energies.
It mixes with the energies of other beings.
It happens during our lifetime.
There is a similar law.
It governs our mental lives.
It is our mutual life.
It relates to the life of other thinking creatures.
There is a shock of mind upon mind.
It leads to constant interchange.



அதையும் விஞ்ஞானமாக்கியுள்ளனர்.
அது நடக்கும் வரை இதை ஏற்க முடியாது.
பிறருடைய வாழ்வில் அமைப்புள்ளது.
நம் உடலின் அம்சங்களுண்டு.
சூட்சுமமான உயிரின் அது போன்ற அம்சங்களுண்டு.
அது போன்ற பல உண்டு.
அவை பின் வருபவை.
நம் வாழ்வு, ஆசைக்குரிய சக்திகள் அவை.
நம் பாசம், முயற்சி, பவர் உண்டு.
பிறர் வாழ்வில் இவை நுழைவதைக் காணலாம்.
இது நாம் உயிர் வாழும்பொழுது நடக்கிறது.
நாம் இறந்த பின்னும் இது தொடர்கிறது.
நெடுநாளாக நாம் ஒன்றை அறிவோம்.
அது கண்ணுக்குத் தெரியாத ஞானம்.
நமக்கு உயிருண்டு என அது கூறுகிறது.
நமக்கு உடலும் உண்டு.
இதுவும் மரணத்திற்குப் பின் கரைகிறது.
இதுவும் பிறர் உயிரில் பங்கு கொள்கின்றன.
நம் உயிருக்கு சக்தியுண்டு.
மற்ற ஜீவன்களின் சக்தியுடன் அவை கலக்கின்றன.
அது நம் வாழ்நாளில் நடக்கிறது.
இதைப் போன்ற வேறொரு சட்டம் உண்டு.
அது நம் மன வாழ்வை கட்டுப்படுத்துகிறது.
அது பரஸ்பரமான வாழ்வு.
சிந்திக்கும் ஜீவன்களை அது இணைக்கிறது.
மனம் மற்ற மனத்திற்கு அதிர்ச்சி தந்தபடியிருக்கிறது.
இதனால் தொடர்ந்த பரஸ்பர பரிமாறுதலுண்டு.

It leads to fusion of elements.
There is no constant dissolution.
It disperses.
They are reconstructed.
Interchange, intermixture and fusion are there.
It is the very process of life.
It is a law of existence.

We have two principles in Life. Page No.202
It is the necessity of the separate ego. Para No.5
It is to survive in its distinctness.
It is its will.
It desires to guard its identity.
Nature imposes a compulsion on life.
It is to fuse itself with others.
Ours is a physical world.
It lays much stress on the separate identity.
Nature needs to create a stable separate identity.
Nature needs to create a stable separate form.

It is her first problem.
It is the most difficult problem.
To create a separate survival.
It is of individuality.
Life is an incessant flux.
It is motion of Energy.
There is the unity of the infinite in Life.



பூதங்கள் இணைய அது உதவும்.
தொடர்ந்து கரைபவை உண்டு.
அவை பரவுகின்றன.
அவை மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றன.
பரிமாறுதல், கலந்து கொள்வது, இணைவது உண்டு.
இது வாழ்வின் வகை.
இது வாழ்வின் சட்டம்.

வாழ்வில் இரு சட்டங்கள் உள.
அகந்தையின் அவசியம் ஒன்று.
அது தனித்து வாழ்வது.
அது அகந்தையின் உறுதி.
அகந்தை தன் தனித்தன்மையை காக்க விரும்புகிறது.
இயற்கை வாழ்வை கட்டுப்படுத்துகிறது.
இயற்கை அகந்தையை மற்றவரோடு இணைய வேண்டுகிறது.
நாம் வாழ்வது ஜட உலகம்.
இங்கு தனித்து வாழ்வதை வலியுறுத்துகிறது.
இயற்கை தனித்த நிலையான ஐக்கியத்தை நாடுகிறது.
இயற்கை தனித்த நிலையான ரூபத்தை உற்பத்தி செய்ய வேண்டும்.
இது இயற்கையின் முதற் பிரச்சினை.
இது மிகக்கடுமையான பிரச்சினை.
தனிப்பட்ட வாழ்வை ஏற்படுத்துவது அப்பிரச்சினை.
அது தனித்தன்மையது.
வாழ்வு அலைபாய்வது.
வாழ்வு சக்தியின் அலைமயமானது.
வாழ்வில் அனந்தத்தின் ஐக்கியமுண்டு.

There is the atomic life.
The individual form persists here.
It is the basis.
It secures prolonged existence.
They are the aggregate forms.
It does so by aggregation.
There is the mental individualization.
There is the vital individualization.
The aggregate form is their basis.
Nature secures a sufficient firmness.
It is a firmness in this respect.
She safely conducts her ulterior operation.
At once she reverses the process.

The individual form perishes.
The form dissolves.
Thus the aggregate life profits.
This however cannot be the last stage.
It can be reached only by harmonization.
Then the individual is able to persist.
He persists in his consciousness of individuality.
And yet fuses with others.
He can do so without disturbing the equilibrium, without interruption of survival.

*Contd....*

❋❋❋



அணுவின் வாழ்வுண்டு.
இங்கு தனி உருவம் நிலைக்கிறது.
இது அடிப்படை.
இதனால் நீண்ட வாழ்வைப் பெறுகிறது.
அவை தொகுப்புகள்.
சேர்வதால் தொகுப்பு ஏற்படுகிறது.
மனத்தின் தனித்தன்மையுண்டு.
பிராணனுக்கும் அது உண்டு.
தொகுப்பு இவற்றிற்கடிப்படை.
இயற்கைக்கு போதுமான உறுதி கிடைக்கிறது.
இந்த நோக்கத்திற்கான உறுதியது.
உடனே தன் ஆழ்ந்த செயலை நடத்திக் கொள்கிறது.
இது கிடைத்தவுடன் இயற்கை போக்கை தலைகீழே மாற்றுகிறது.
தனி உருவம் அழிகிறது.
உருவம் கரைகிறது.
கூட்டு வாழ்வு பலனடைகிறது.
இதுவே முடிவான கட்டமல்ல.
இரு சட்டங்களும் சுமுகமாக இணைந்தால் அதை எட்டலாம்.
தனி மனிதன் நிலைக்க முடியும்.
தன் தனி ஜீவியத்தில் அவன் வாழ முடியும்.
இருப்பினும் பிறருடன் இணைய முடியும்.
சம நிலையை பாதிக்காமல் இதை அவனால் செய்ய முடியும்.
தன் வாழ்வுக்கு இடையூறின்றியும் செய்ய முடியும்.

தொடரும்......

❋❋❋

# Pavitra understood Sri Aurobindo after reading 'Adventure of Consciousness'

## 'அட்வென்ச்சர் ஆப் கான்ஷஸ்னஸ்' என்ற புத்தகத்தைப் படித்தபின் பவித்திராவுக்கு ஸ்ரீ அரவிந்தர் புரிந்தது

பவித்ரா பிரெஞ்சு இன்ஜினீயர். ஆஸ்ரமம் ஆரம்பிக்குமுன் வந்தவர். திபேத்தில் ஒரு புத்த மடத்திற்குப் போக அவர் ஜப்பானிலிருந்து வந்தார். வழியில் புதுவையில் பகவானைச் சந்தித்தவர் இங்கேயே தங்கிவிட்டார். அந்த நாளில் பகவான் பவித்ராவை தினமும் சந்தித்துப் பேசுவார். ஆசிரமப் பள்ளி ஆரம்பித்த காலத்தில் இவரை முதல் டைரக்டராக அன்னை நியமித்தார். உலகப் போர் நடக்கும் பொழுது பகவான் ரேடியோ செய்தி கேட்பது வழக்கம். அப்பொழுது பவித்ரா அறையில் ரேடியோ இருந்தது. அதிலிருந்து கனெக்ஷன் மூலம் பகவான் அறையில் ஒலிபெருக்கி அமைத்து பகவான் செய்தி கேட்க வசதி செய்தார்.

மேல்நாட்டு மக்கள் அளவு கடந்த கட்டுப்பாடுடையவர்கள். 11ஆம் வயதில் பவித்ரா தான் பெற்ற சைக்கிளை ஆர்வத்தால் 'அக்கு வேறு, ஆணி வேறாக' பிரித்துவிட்டார். பிரித்தவருக்கு மீண்டும் பூட்டத் தெரியவில்லை. ஒரு ரிப்பேர் கடையில் கொடுத்து பூட்ட வேண்டும். தானே பாகங்களை அறிந்து, ஒவ்வொன்றாக மீண்டும் சைக்கிளாகச் சேர்க்க முடிவு செய்து பெரும்பாடுபட்டு வெற்றி கண்டார்.



பவித்ரா இறந்தவுடன் அன்னை நெஞ்சில் அவர் ஆத்மா வந்து உறைந்தது ஒரு நிமிஷம்கூட வெளியில் போகவில்லை. சூட்சும வாழ்விலும் அப்படி அன்னை நெஞ்சில் வந்து தங்கிய சாதகர்கள் வெளியே போய்ப் பலரையும் சந்தித்துவிட்டு மீண்டும் வருவதுண்டு என அன்னை கூறியுள்ளார்.

பவித்ரா இன்ஜினீயர். பல்வேறு ஆராய்ச்சிகள் செய்தவர். அவருடைய ஆராய்ச்சிகளை அவருக்குப் பின் சோதனை செய்தவர், அணு ஆராய்ச்சியும் பவித்ரா செய்ததாகவும், அணுகுண்டு செய்யும் விஷயங்களையும் அதில் கண்டதாகக் குறிப்பிட்டார்.

மேற்கூறிய புத்தகத்தைச் சத்பிரேம் எழுத அன்னை நெடுநாளாக முயன்றார். புத்தகம் வெளிவந்து மேல்நாடுகளில் பிரபலமாகி, அன்னையைத் தேடி ஏராளமான பேர் வர உதவியாக இருந்தது. ஆசிரம வாழ்வில் ஒரு பெரிய புரட்சியைச் செய்த நூல் அது. மிகவும் எளிய நூல். பிரெஞ்சில் எழுதப்பட்டது. ஆங்கில மொழிபெயர்ப்பு உயர்ந்த ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. இந்நூலை படித்தவர் போற்றிய முக்கிய கருத்து மனம் என நாம் கூறுவதில் சிந்திக்கும் மனம் (Mind) வேறு, உணரும் பிராணன் (vital) வேறு என்பதாகும். பொதுவாக புறச் செயல், அகவுணர்வையே அறியும் நமக்கு இந்த வேறுபாடு முக்கியமாகிறது.

- ஸ்ரீ அரவிந்தம் எளிதில் புரியாது எனப் பெயர் வாங்கியது.
- பவித்ராவே இக்கூற்று மூலம் அவ்வுண்மையைப் பேசுகிறார்.
- எவ்வளவு நாள் சூரியனைப் பார்த்தாலும் பூமி உலகைச் சுற்றி வரும் உண்மை தெரியப்போவதில்லை என்பது போல் ஆன்மீகத்திற்கு முக்கியமான உண்மை.

*"நானே இறைவன். உலகமே இறைவன். இறைவனைத்*

*தேடி அலைவது அஞ்ஞானம். நம்மை நாமே இறைவனாக அறிவதே ஞானம்" என்ற வேதாந்தக் கருத்து.*

- பகவான், அன்னையை எவ்வகையில் ஒருவர் அறிந்தாலும் - தரிசனம், போட்டோ, நூல் - ஆரம்பத்திலேயே இந்த ஞானம் வந்துவிடும். இதைக் காப்பாற்றுவது அரிது. நாம் இந்த ஞானத்தைப் பெற்றோம் என்பதும் ஒருவர் எடுத்துக் கூறாமல் தெரியாது. அதையே பவித்ராவின் கூற்று வெளிப்படுத்துகிறது.
- **அன்னையை அறிவதே ஆன்மீக பாக்கியம் என்பதன் உட்கருத்து அது.**

❋❋❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அவசரம் பயன்படாது எனத் தனக்கே 20, 30 வருடங்களாகச் சொல்லிக் கொள்பவர், அறிவு ஏற்றுக் கொண்டதை உணர்வு ஏற்க இவ்வளவு நாளாயிற்று என்று அறிய வேண்டும்.

***அறிவு உணர்வாக ஒரு ஜென்மம் தேவை.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**உள்ளத்தில் மறுக்க முடியாத வேகமிருந்தால் வக்ரமும் சுயநலமும் நம்மை நாடி வரும். ஏற்றுக்கொண்டு எதிர்காலத்தில் யோசனை செய்வது வழக்கம்.**



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## ✡ ரொம்ப நல்லவர் (Perfect gentleman)

- **இந்த நண்பருக்கு ரொம்ப நல்லவர் எனப் பெயர்.**

நான் இலவசமாகச் சிலருக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதைப் பணம் தரும் மாணவர்கள் தங்களை ஏமாற்றுவதாகக் கூறுகின்றனர் என்று என்னிடம் இவர் குறை சொன்னார்.

இதைவிடக் கேவலமான எண்ணமில்லை.

இவரே ஒருவனுக்கு இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுக்கச் சொன்னார்.

(அவர் ஒரு மாணவனைக் கொண்டு வந்து இலவசமாகச் சொல்லிக் கொடுக்கச் சொன்னார்.)

சீட்டு எடுத்த பிறகு கட்ட எரிச்சலாக இருக்கும் - இதுவும் இவரே சொல்லியது.

வாட்ச்மேன் முனுசாமி ஒரு கம்பியை விழுங்கிவிட்டான்.

டாக்டர் இவர் நண்பர். ரூ.5/- பீஸ் 1959இல்.

அன்று MBBS சங்கரராமனுக்கு 3 விசிட்டுக்கு ரூ. 1/-.

முனுசாமியை ENT ஸ்பெஷலிஸ்டிடம் அழைத்துப் போனேன்.

ரூ. 5 கொடுத்துச் சோதனை செய்தேன்.

நண்பர் கூட வந்தார்.

''முனுசாமி இவருக்கு முக்கியமானவன்'' என்று அறிமுகப்படுத்தினார்.

நான் செய்த சேவைக்கு இவர் மட்டமான காரணம் கற்பிக்கிறார்.

இதுபோல் 4, 5 நிகழ்ச்சிகள் உண்டு.

மனிதன் மட்டமானவன், சந்தேகப் பிராணி, குப்பையைச் சேர்ந்தவர்.

இவருக்கு ரொம்ப நல்லவர் perfect gentleman எனப் பெயர்.

இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுப்பது பொறுக்காமல் மட்டமாகப் பேசுகிறார்.

ஹாஸ்டலில் நான் காலையில் பாடம் சொல்லிக் கொடுக்கப் போவதால் மத்தியானம் குளிப்பேன் - செக்ரடரி என்பதால் தவறு செய்கிறீர்கள் என்றார் மற்றொரு நண்பர்.

நான் வாட்ச்மேனுக்கு ரூ. 1/- பணம் தருவேன், சமயத்தில் 2/- ரூபாயும் தருவேன்.

அவனுக்கு ரூ. 20 சம்பளம்.

நண்பர் கயவர்.

பிறர் செய்யும் நல்லதை யோசனை செய்து குறையாகப் பேச மனம் மட்டமாக இருந்தால் போதாது, குதர்க்கமாகவுமிருக்க வேண்டும்.

***இது குதர்க்கமான கயமை.***

இன்னொரு நண்பர், ''எந்த விஷயத்தையும் எப்படித் திரித்துக் கூறலாம் என நான் நினைப்பேன்'' என்பது அது போன்றது.



❋ மனம் பெருந்தன்மையாக இருக்க வேண்டும், மட்டமாக இருக்கக்கூடாது.

நண்பர் மட்டமானவர் என நான் கடுமையாகக் கண்டித்தால் உள்ளே ஆழத்திலிருக்கிறது அது எனப் பொருள்.

அப்படியிருப்பது என்னை உறுத்துவதால் அவரைப் பற்றிப் பேசச் சொல்கிறது - இது உண்மை.

ஆனால் பெரிய கஷ்டமான discipline கட்டுப்பாடு.

இந்த நண்பர் திறமையுள்ள எவரையும் பாராட்டிய-தில்லை.

அவருக்கு எந்தத் திறமையுமில்லை; திறமையுள்ளவர் மீது எரிச்சல்.

அவர் அளவு கடந்த பிரபலமானவர்.

பிரபலம் ஒரு மூட நம்பிக்கை.

பெரிய ஊழல் அரசியல்வாதி பணம் வாங்கவில்லை என மக்கள் நம்புகிறார்கள்.

நம்மிடம் அப்படி நிறைய மூட நம்பிக்கைகளுண்டு.

மூட நம்பிக்கையற்றவர் மிகச்சிலரே.

## ✡ வீட்டு வேலை

❋ **உலகம் வெறுத்து ஒதுக்குவதற்குச் சிகரம் வேலை செய்ய ஆள் வர மறுப்பது - Domestic servants are a real social index.**

1950இல் அமெரிக்காவில் கல்லூரி ஆசிரியருக்கு $ 12,000 கொடுக்கும்பொழுது குப்பை வாருவதற்கு

$ 17,000 கொடுத்தார்கள். Ph.D. பெற்றவரும் வேலைக்கு வந்தனர்.

- 150 வருஷத்திற்கு முன் விவசாயத்தில் மெஷின்கள் அமெரிக்காவில் வந்துவிட்டன. அங்குக் கூலி ஐரோப்பாவைப் போல் அப்பொழுது 10 மடங்கு. அப்படியிருந்தும் ஆள் கிடைக்கவில்லை. அதனால் வேலையைச் சுருக்கும் மெஷின்கள் (labour saving machines) கண்டுபிடிக்கப்பட்டன.
- சம்பளம் அதிகமாகக் கொடுத்தால் வேலைக்கு ஆள் கிடைக்கும். *எந்தச் சம்பளம் கொடுத்தாலும் இந்த வேலைக்கு - மட்டமான வேலைக்கு - வரமாட்டேன் என்பது நாகரிகம்.*

  பெர்னாட்ஷா சவுக்கடியைப் பற்றிப் பேசும்பொழுது எந்தக் கூலிக்கும் இந்த வேலையைச் செய்யமாட்டேன் என்று மனிதன் வளரும்வரை சவுக்கடியை ஒழிக்க முடியாது என்றார்.
- "என்னால் ஒட்டு கேட்க முடியாது, என்னால் கோள் சொல்ல முடியாது, பொய் சொல்ல முடியாது, பிடியை விடாமலிருக்க முடியாது, என்னால் குறை சொல்ல முடியாது, பொறாமைப்பட முடியாது, அழிபவனைப் பார்த்து கை தட்டிச் சிரிக்க முடியாது'' என்று சொல்லும்வரை ஒருவர் devotee அன்பராக முடியாது.
- அதிகாரம் செய்ய வெட்கப்பட வேண்டும்.

  ஆசைப்படும்வரை அன்னையில்லை. மனித குருவைத் தெய்வம் Divine என்பவர் தான் ஒரு நாள் தெய்வமாகி Divine அனைவரையும் மட்டமாக



நடத்த ஆசைப்படுபவர் எனப் புரிந்து கொள்ள வேண்டும்.

- இந்த நாகரிகம் எல்லாம் 1000 ஆண்டிற்கு முன் நம் நாட்டில் பெயரெடுத்தது. மேல்நாட்டில் பெரு-வாரியான (majority) மக்கள் பின்பற்றுகின்றனர். அவர்கள் வெட்கப்படுவதைச் செய்ய நாம் பெருமைப்படுகிறோம். அமெரிக்காவில் கம்ப்யூட்டர் (software) சாப்ட்வேர் வேலைக்கு எந்தச் சம்பளம் கொடுத்தாலும் ஆள் 20%க்குத்தான் கிடைக்கும். அது ஜீவனற்ற வேலை routine work என்பதால் அறிவுள்ளவர் above average people வரமாட்டார்-கள். நமக்கு அது வரப்பிரசாதம். இன்ஜீனியர்கள் (engineers) சென்ற ஆண்டு 60,000 பேர் அமெரிக்காவில் பட்டம் பெற்றனர். அவர்களில் அமெரிக்கர் 30,000. இந்தியாவில் 2 இலட்சம் இன்ஜீனியர் அந்த வருஷம் பட்டம் பெற்றனர். மட்டமானவர்கள் (below average, physical people) தான் இன்ஜீனியரிங் அமெரிக்காவில் படிப்பார்கள். நமக்கு B.E. பெரியது. 10 அல்லது 20 ஆண்டிற்குப் பின் B.L., M.B.B.S.க்கும் அமெரிக்காவில் கெட்டிக்காரப் பிள்ளைகள் வரமாட்டார்கள்.
  - பழைய சாஸ்திரப்படி குருக்கள், சாஸ்திரி அய்யர், அந்த வேலை இன்று பிரபலமில்லை.

    வைத்தியன், தச்சன், கருமான், சூத்திரன்.

    பழைய கருமான் புதிய இன்ஜீனியர்.

    சர்க்கார் உத்தியோகம் செய்பவன் வைஸ்யன்.

    இன்று அனைவரும் அதற்காகப் பெருமைப்படு-கிறார்கள்.

- சாப்பாடுக்கு உழைக்க வேண்டும் என்றவரை professions தொழில் இருக்கும்.

  அது சரியில்லை என Mother அனைவருக்கும் சாப்பாடு போட்டார்.
- ஐம்பது வருஷத்திற்குள் 80% மக்கள் சாப்பாட்டிற்கு உழைக்கும் அவசியமிராது.
- அன்பன், சாதகன், "இருக்குமிடம் தேடி என் பசிக்கு அன்னம் உருக்கமுடன் வரும்".
- வேலைக்குப் போக வேண்டிய அவசியம் அறிவு வளர்ந்தவனுக்கு எதிர்காலத்தில் இராது.

## ✡ உறவு

✺ ***பணம், பதவி, பெண் என்பவை பொருட்டில்லை எனில் உறவு free ஆக இருக்கும்.***

- அனைத்தையும் பிறருக்குக் கொடுப்பவன், அனைத்தையும் கொடுக்கக் காத்திருப்பவன், நல்ல உறவைப் பெறலாம். கொடுப்பது நஷ்டமில்லையென அவன் அறிவான்.

  ***கொடுப்பது பெருகும்.***
- திருட ஒன்றுமில்லை என்றால் பூட்டி வைக்க வேண்டியதில்லை.

  திருடுபவர் எவருமில்லை என்றாலும் பூட்டி வைக்க வேண்டாம்.

* பெரும் செல்வம்



- சொத்துக்கு முழு மரியாதையுண்டு.

  பதவிக்கு அதைவிட மரியாதையுண்டு.

  பெண்ணுக்கு ஏங்காத ஆணும், ஆண் தேடாத பெண்ணுமில்லை.
- கல்வி, வைத்திய செலவு, வீடு, கார் சர்க்கார் முழுவதும் கொடுக்கும் நிலை உருவாகிறது. அதன்பின் சாப்பாடுதான் பாக்கி.

  சமூகத்தில் மனிதனாய்ப் பிறந்தவனைச் சமூகம் பாதுகாக்கும் என இளங்கோ நகரில் இருந்தபொழுது அமெரிக்க நண்பரிடம் சொன்னேன்.

  *ஒரு பெரிய - மிகப்பெரிய - உயர்ந்த நல்ல பண்புள்ள குடும்பத்தைக் கவனி.*
  - அங்கு எவருக்கும் சாப்பாட்டிற்கு என்ன செய்வது என்பது மனதில் எழாது.
  - அதிகாரம் செய்ய அசிங்கப்படுவார்.
  - பிறருக்குப் பணிய ஆசையாக இருக்கும். அதுவே அன்பின் வெளிப்பாடு.
  - கொடுப்பது இயல்பு.
  - அடுத்தவரைச் சந்தேகப்பட மனம் கூசும்.
  - பெண் விஷயத்தில் தவறு ஏற்படும் என நினைக்க முடியாது.

    இவை 1000 ஆண்டிற்கு முன் நம் நாடு பெற்றுப் போற்றியது.

    வளமான பகுதிகளில் இன்றும் ஏராளமாகக் காணலாம்.

ஏன், அன்பர்கள் குடும்பங்கள் அப்படியிருக்கக் கூடாது?

நாம் முனைந்து கங்கணம் கட்டிக்கொண்டால் அது ஏற்படும்.

அத்துடன் அன்னை சேர்ந்தால் எவ்வளவு அழகாக இருக்கும்.

முதற் கடமை:

சொல்லெல்லாம் நல்லதாக, பாஸிட்டிவ்வாக இருக்க வேண்டும்.

நயமான, நளினமாக இருக்கும்.

மனம் நெகிழ்ந்து, துரியோதனன் மனைவி பானுவும் கர்ணனும் பழகியதைப் போலிருக்கும்.

அது 15 நாளைக்கு.

இது நிரந்தரம்.

அதுவே சுபாவமாக இருக்க வேண்டும்.

ஒருவர் அடுத்தவருக்கு அதைத் தர முன் வந்தால், அடுத்தவர் ஏற்க வேண்டும்.

அது எங்கள் குடும்பமாகும்.

"100 ரூபாய்" சொத்தாகாது, வருமானமாகும்.

மனம் மகிழ்ந்து, நெகிழ்ந்து, பரந்து, மலர்ந்து, விரிந்து இனிக்கும்.

அது மனம் வீசும் மணம். அது போன்ற மனம் இணைவது நறுமணம் - திருமணம் எனப்படும்.

இனிய ரோஜா மலராகி, நறுமணம் பரப்ப வேண்டும்.



*குரலினிக்கப் பேசி, குழலினிமை எழுப்ப முடியுமா?*

✡ **மகசூலுக்கு விலை**

- **"என் மகசூலுக்கு விலை கிடைப்பதில்லை".**
  - ✧ வேலையைச் சிறப்பாகச் செய்தால் விலை பெரியதாகக் கிடைக்கும்.

    1969இல் மணிலா மூட்டை ரூ.60இல் ஆரம்பித்து ரூ.90 வரை போயிற்று. 1970இல் கிராமத்திற்கு பாங்க் பணம் கொடுத்தது. நல்ல மழை, மணிலாவில் பூச்சி விழவில்லை. அபரிமிதமான விளைச்சல். விளைச்சல் அதிகமானால் விலை குறையும். மார்க்கட் ரூ.90இல் ஆரம்பித்தது ரூ.190 வரை உயர்ந்தது. கிராமத்து மக்கள் அயராத உழைப்பாளிகள். பாங்க் பணத்தைத் திருப்பித் தரும் நல்லெண்ணம், மழை பெய்து விலை கிடைத்தது.

    வால்டருக்கு அப்படி வந்தது.

    விவசாயிக்கு எத்தனை மூட்டை காய்க்க வேண்டும், என்ன விலை வேண்டும் என்பதை எந்த வருஷமும் செய்யலாம்.

    இதுவரை protection, மழை, விவசாயிக்கு மன நிம்மதி அப்படித்தான் நடக்கிறது. அவற்றுள் அவன் எதிராக அதிகமாக வேலை செய்வதில்லை.

    அதனால் ஓரளவு பலிக்கிறது.
- ஒரு பெரிய சோதனை experiment செய்தால் மௌனமாக silentஆக அடுத்த வருஷம் கம்பனி பெரும்தொகை சம்பாதிக்க வேலை செய்யலாம். அதுவும்

ஒரு முறைதான் நடக்கும். அவன் மாற வேண்டும் என்றால் அவனே மாறப் பிரியப்பட வேண்டும். தாயார், தகப்பனார் மாறினால் அது நடக்க வழியுண்டு.

*தொடரும்....*

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பலஹீனமானவரை நியாயமாக நடத்தினால், அவரைத் தமக்குப் பணிய வைக்க அல்லது அழிக்க அவருடைய உதவியைக் கேட்பார்கள்.

- ***உதவுபவரை அழிப்பது உதவி பெறுபவர் தர்மம்.***
- ***அழிப்பதற்காக உதவி கேட்பார்கள்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

யாருடைய தொடர்பு அர்த்த நாசம் தருமோ அவரிடமிருந்து விலகுவது அறிவுடைமை. அவனே போகும்வரை காத்திருக்கும் பொறுமை யோகத்திற்குத் தேவை. விலக்குவது "ஆரம்ப"மாகும்.

***அர்த்தநாசம் தருபவனும் தானே போகும்வரை காத்திருக்க வேண்டும்.***





## P.124 An inspiration and a lyric cry

### உற்சாகம் உணர்வாகும் குரல்

☆ பிரம்மத்தைத் தாங்கி வரும் க்ஷணம் கொணரும் பூரிப்பு;

☆ கற்பனைக்கெட்டாத அழகு சொர்க்கத்தின் கையை ஒடித்தது

☆ வளரும் கனவு அழிக்கும் எல்லை;

☆ வானமெனும் அற்புதம் எழுப்பும் பறவையின் கானம்

☆ ஒளிமயமான கரையின் மரணமிலா மக்கள்.

☆ இறைவனின் இரு கரம் உருவாக்கும் சிருஷ்டியலைகள்;

☆ அற்புதமும், ஆனந்த பூரிப்பும் வழி தவறி எதிர்கொள்ளும் வகை.

☆ பூவுலக ஆனந்தம் கடந்த சச்சிதானந்தம்,

☆ இதயத்தின் பிரம்மம் எழுப்பும் இடியோசையான சிரிப்பு

☆ மகிழ்வெனும் மன்னன் பெற்ற அன்பெனும் அமைச்சர்.

☆ ஆன்ம ஜோதி ஏற்ற அழகெனும் உடல்.

☆ முரண்பாடு எனும் முற்பிறவி நண்பர்கள்

☆ எதிர்ப்பின் எல்லையான சுமுகத்தின் அரவணைப்பு:

☆ மென்மையான தூய்மை தரும் தண்மையான இங்கிதம்

☆ தாயின் முலையில் தவழும் தெய்வம்:

☆ இயலாமையை இழந்த லோகத்தில் பொய்த்த பொய்மை;

☆ கவசமான அறியாமை அறிவின் அணிகலன்,

☆ சத்தியம் பெற்ற சுதந்தரமெனும் கற்பனை,

☆ மோட்சத்தின் நெருப்பில் தழலென எழும் இன்பம்;

☆ அழகை வணங்கும் அறிவின் ஆர்வம்,

☆ அமைதியான ஆன்மீக சட்டத்தின் அடிமையெனும் பெருவலிமை,

☆ ஆனந்தத்தின் மார்பில் பதித்த தலையுடைய சக்தி.

☆ கற்பனைக்கெட்டாத பெருமையின் சிகரம்,

☆ சுதந்தரமான சுயராஜ்யம் பெற்ற விவேகத் திடல்கள்

☆ கன்னியான சூரியன் கருதி விரும்பும் ஆதரவு,

☆ திருஷ்டியுள்ள ஆத்மாவின் ஜோதிமயமான சாஸ்திரம்

☆ கதிரான பிரம்மம் வீற்றிருக்கும் பதவியெனும் அரியாசனம்.

☆ பெருமையின் உயர்வான தோற்றம் அளவுகடந்த கனவுலக அமைப்பு

☆ சூரிய ராஜ்யம் அறியும் ராஜநடை:

☆ தெய்வத் திருச்சபை குழுமிய பெருமக்கள்

☆ பளிங்கு உறுதியை ஆளும் வாழ்வின் திறமை,

☆ எதேச்சாதிகாரம் எழுப்பிய அதிகாரக்குரல்

☆ வாகை சூடிய தோள்கள் வலிமைமிக்க கரங்கள்.

☆ அழகும் உயர்வும் அபரிமிதமான அனைத்துப் பொருள்கள்,

☆ அரச பதவியின் அந்தஸ்து பெற்ற ஆத்மாவெனும் ஜீவன்கள்.

❋❋❋



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## II/19) மனிதனின் ஜீவிய நிலைக்கேற்ப திருடன் அன்னையின் ஸ்பர்சத்தைப் பரிசாக அளிக்கிறான்.

☆ **திருடன் மூலம் வரும் அன்னை மனத்திண்மை மூலம் வரும் ஞானம்.**

❋ வாழ்வின் ஸ்பர்சம், அன்னையின் ஸ்பர்சம்.

❋ நம்மிடமில்லாதது, நமக்கு வாராது.

❋ அது நமக்குத் தெரியாமல், ஆழ் மனத்தில் இருக்கும்.

❋ நாம் திருடன் என்பது ஆண்டவன் - அன்னை.

❋ திருடன் நம் வீட்டிற்கு வந்தால், நம்முள் திருடன் இருக்கிறான் எனப் பொருள்.

❋ இரமணாஸ்ரமம் வந்த திருடர்கள், எதையும் காணாமல், மகரிஷியை அடித்தனர்.

❋ சிஷ்யர்கள் ஓடி வந்து தடுத்தார்கள்.

❋ மகரிஷி அவர்களைத் தடுக்க வேண்டாம் என்றார்.

❋ 'எனக்குப் பூசை நடக்கிறது' என்றார்.

❋ வாழ்வில் ஆசையிருப்பது, ரிஷிக்குத் திருட்டுப் புத்தி.

❋ அது இருப்பதால் திருடன் வருகிறான். அவன் அடிப்பதைத் தடுக்காதே என்றார்.

❋ ஸ்ரீ அரவிந்தருக்கு ரொட்டி சப்ளை செய்யும் பையன் 5 ரூபாய் திருடியதற்காக சிஷ்யர்கள் அவனை அடித்தார்கள்.

❋ சத்தம் கேட்டு பகவான் வந்தார்.

❋ அடிக்க வேண்டாம் என்றார்.

❋ அந்த 5 ரூபாயை அவனிடமே கொடுக்கச் சொன்னார்.

❋ அவன் மனமும், அடிப்பவர்கள் மனமும் ஒன்று எனப் பகவான் கூறுகிறார்.

❋ நம்மிடம் வருபவன் நம்மைப் பிரதிபலிப்பவன்.

❋ இது அடிப்படை உண்மை.

❋ இதை ஏற்க மனத்தில் உண்மை (sincerity) வேண்டும்.

❋ உள்ளதை உண்மை என்கிறோம்.

❋ உள்ளதே உரியதைக் கவரும், ஈர்க்கும்.

❋ மனம் எதை ஆழ்ந்து நாடுகிறதோ, நாம் அதுவாக மாறுவோம் என்பது கீதை.

❋ அதன்படி நாம் படும் துன்பங்கள் நாமே விரும்பிப் பெற்றதாக இருக்கிறது.

❋ ஆழ்ந்து ஆண்டவனை அழைக்க விரும்புகிறவர்க்கு, அப்படி அழைத்தாலன்றி போகாத வியாதி வரும்.

❋ அவர் கேட்டது ஆண்டவனை ஆர்வமாக அழைக்கும் வாய்ப்பு.

❋ அதை ஆண்டவன் வியாதியாக அளிக்கிறான்.

❋ பெரிய வேலை வேண்டுபவர்க்கு இரவு, பகலாய் படிப்பது அமையும்.

❋ கேட்டது வேலை, வந்தது படிப்பு.

❋ படிப்பால்தான் வேலை வரும் என்பதால் படிப்பை ஆண்டவன் தருகிறார்.

❋ சத்தியஜீவியத்தை ஆர்வமாக ஜீவனில் ஆழத்திலிருந்து கேட்டால் அது வரும்.

❋ கண்ணப்பன் கேட்டது சிவனை, கிடைத்த வாய்ப்பு கண்ணைக் கொடுப்பது.

❋ கொடுக்கப் பெருமைப்பட்டார்.



சிவனையடைந்தார்.

❋ நமக்குக் கிடைத்தது, நாம் கேட்டதின் மறுரூபம்.

❋❋❋

**II/20) முறையான சமூகத்தில் வீரியமான மனிதனுடைய ஆசையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில், விபசாரி இறைவனின் திருவுள்ளத்தைப் பூர்த்தி செய்ய ஆண்மையின் வீரியத்திற்குச் சேவை செய்கிறாள்.**

☆ **வீரியத்திற்கு சேவை செய்யும் விபசாரி பூர்த்தி செய்வது திருவுள்ளம்.**

❋ ஆண்மை உலகைக் காக்கும்.

❋ உலகைக் காப்பது வீரம்.

❋ வீரம் மனத்தில் உயர்வது உடலில் வீரியம் சேர்வது.

❋ க்ஷத்திரியன் ஊருக்கும் உலகத்திற்கும் காவலான அரண்.

❋ க்ஷத்திரிய வம்சமில்லாவிட்டால் நாடு அடிமையாகும்.

❋ அதனால் க்ஷத்திரியன் அரசனாகிறான்.

❋ ஊருக்குப் பாதுகாப்பு தரும் க்ஷத்திரியனுக்கு உயிர் தருவது உள்ளத்தின் உயர்ந்த சிறப்பு.

❋ உள்ளத்தின் சிறப்பு உயர்ந்தால் பெருகி வரும் வீரம் உபரியான வீரியமாக உடலில் ஊறும்.

❋ சாமான்யரால் அவனுக்குச் சேவை செய்ய முடியாது.

❋ அவன் மனம் ஆழ்ந்து திருப்தியுறும் சேவை ஆண்டவனுக்குச் செய்யும் அற்புதச் சேவை.

❋ எளிய உள்ளமோ, முறையான மனமோ அதைச் செய்ய முடியாது.

❋ மனம் உயர்ந்து சேவைக்காக முறையை மீறும் உத்தமரால்

மட்டுமே முடியும்.

- நாட்டு விடுதலைக்காக குடும்பக் கடமைகளை மறந்து சிறை செல்லும் தியாகியின் வீரம் அது.
- ஒருவர் வயிற்றைக் கிழிப்பது கொலை.
- புண்ணான குடலால் உயிரை இழக்க இருக்கும் ஒருவர் வயிற்றைக் கிழித்து, அவரைக் காப்பாற்ற அனைவராலும் முடியாது.

முடிந்தவர்க்கு மனம் ஒப்பாது.

- அதைச் செய்பவர் டாக்டர்.
- அவர் உயிரைக் காப்பவர், உயிரை எடுப்பவரிலர்.
- உலகம் உய்ய ஆத்ம ஞானம் தேடுபவன் ஞானி.
- அதைச் செய்ய அவன் வாழ்வை மறுத்து பிரம்மச்சாரியா-கிறான்.
- உலகம் அவனிருக்குமிடம் தேடி, அவனை நாடி, அவன் தேவையைப் பூர்த்தி செய்கிறது.
- அவன் வாழ்வுக்குத் துரோகம் செய்தவனிலன்.

வாழ்வை வளப்படுத்த துறவறத்தை மேற்கொண்டவன்.

- மரம், செடி, கொடியை அழிப்பது இயற்கைக்குச் செய்யும் துரோகம்.
- அதைச் செய்பவன் காட்டைத் திருத்தி, நிலமாக்கி, உணவு உற்பத்தி செய்யும் விவசாயி.
- அனைவரும் பெறும் உணவு அவன் காட்டுக்குச் செய்யும் துரோகத்தால் எழுவது.
- நல்லதைப் பிறருக்காகச் செய்வது பெரிய மனம்.
- உலகம் கெட்டது எனப் புறக்கணித்ததை உலக நலனுக்காக ஏற்றுச் செய்வது பெரிய உள்ளம்.
- 4 பிள்ளைகள் நிலத்தில் வேலை செய்து குடும்பத்திற்குச்



சேவை செய்யும் பொழுது, அதைச் செய்ய மறுப்பது சுயநலம். அதன் பலனை எடுத்துத் தனக்குச் செலவு செய்வது சுயநலம் குற்றமாவது. கல்லூரிக்குச் செல்லுபவன் அதைச் செய்கிறான். அவன் படிப்பால் செய்யும் சேவையை மற்றவர்களால் உழைப்பால் செய்ய முடியாது.

- பரத்தை உலகைக் காப்பாற்ற தியாகம் செய்யும் உத்தமத் தியாகிகளின் தணியாத வீரமான வீரியத்தை தன் நலம், தன் நல்ல பெயரை இழந்து ஏற்பவள். உலகம் அவளைப் பழித்தாலும், அவள் செய்வது திருவுள்ளம். உலகத்தின் வணக்கத்திற்குரியது அவள் ஆத்மா. அவள் கற்பு ஆண்டவனுக்குரியது; விலை மதிக்க முடியாதது. போர் வீரனையும், தேசபக்தி மிகுந்த தியாகியையும் கடந்த சேவை செய்பவள் பரத்தை.

✲✲✲

**II/21) ஆன்மா முதிர்ந்து உடலால் வெளிப்பட்டால், திருமண வரையறையை மீறி, பவித்திரமாகப் பக்குவம் பெற்ற மற்ற ஆன்மாவுடன் உடலால் ஐக்கியப்படும் நிலை விபசாரியின் நிலையாகும்.**

☆ **பக்திக்கு ஜாதியில்லை. உடல் பக்தியை வெளிப்படுத்தினால் உலகத்தார் அனைவருக்கும் அது உடையதாகும்.**

- ஆன்மா ஜீவனுள் நாம் அறியாமல் புதைந்துள்ளது.
- தவத்தால் வெளிப்படும் ஆத்மா பக்தியாலும் வெளிப்படும்.
- ஆண்டாள், மீராவுக்கு அப்படி பக்தி பக்குவம் அளித்தது.
- பக்குவப்பட்ட ஆத்மா மனத்தில் வெளிப்படுவது மனத்தின் சைத்திய புருஷன்.

இந்த நிலையில் அனைவர் எண்ணமும் தெரியும்.

பிறர் எண்ணம் நல்லதாகவே தெரியும்.

எவருக்கும் கெட்ட எண்ணமில்லை எனப் புரியும்.

பிறருடைய கெட்ட எண்ணம் என மனம் காண்பதை மனத்தால் வெளிப்படும் ஆத்மா நல்ல எண்ணமாகக் காண்கிறது. நம் ஆத்மாவின் ஸ்பரிசம் படுவதால் அது கெட்ட எண்ணமாக இருந்தாலும், நல்ல எண்ணமாகத் திருவுருமாறும்.

எதிரி நண்பனாவான்.

மனம் அவனை அன்பான எண்ணத்தால் தழுவும்.

- முதிர்ந்த ஆத்மா மனத்தில் வெளிப்பட்டது போல உணர்வில் வெளிப்படும்.
- அதற்கு vital psychic உணர்வின் சைத்திய புருஷன் எனப் பகவான் பெயரிடுகிறார்.
- அதற்கு எல்லோருடைய உணர்ச்சிகளும் தெரியும்.
- அவை நல்லதாக மட்டும் தெரியும்.
- நல்லதாக நம் ஆத்ம ஸ்பர்சத்தால் மாறவும் முடியும்.
- உடலில் ஆத்மா வெளிப்பட்டால் (sensation) உடலுணர்ச்சி புல்லரிக்கும்.
- அவ்வுடலுக்கு புல்லரிக்கும் நல்லுணர்வு மட்டும் தெரியும்.
- அந்த ஆத்மாவால் பிறர் தாழ்ந்த உணர்ச்சியை உயர்ந்த உணர்ச்சியாக மாற்ற முடியும்.
- கோபிகைகள் கிருஷ்ண பரமாத்மாவிடம் அது போன்ற தொடர்பு கொண்டவர்கள்.
- "அது கற்பனை எனவும் கூறுகின்றனர். அது கற்பனை-யாகவே இருந்தால் அக்கற்பனையைச் செய்தவருக்கு நான் நன்றி கூறுகிறேன்" எனப் பகவான் கூறியுள்ளார்.



- பிருந்தாவன லீலைக்குப் பின் அது போன்ற நிகழ்ச்சிகளை ஆன்மீக இலக்கியம் கூறவில்லை.
- ஆன்மா உடலில் வெளிப்படுவது எதிர்கால சித்தி.
- மனத்திலும் இதுவரை முழுவதுமாக வெளிப்படவில்லை.
- ஆண்டாளுக்கும், மீராவுக்கும் உணர்வில் ஆத்மா வெளிப்பட்டது.
- உடலிலும் ஆன்மா வெளிப்பட்ட சித்தி இதுவரை கேள்விப்-படாதது.
- அவனுக்கு உடலெல்லாம் மூளை எனக் கூறுவதுண்டு.
- உடம்பெல்லாம் கண்ணாய் ஆனாய் என நாயனார் பாடியுள்ளார்.
- உடம்பெல்லாம் இதயம் ஏற்படுவது ஆண்டாளுக்கு அடுத்த உயர்ந்த நிலை.
- உடலெல்லாம் ஆத்மா நிறைவது முடிவான சித்தி.
- நம் ஆத்மா புதைந்த நிலையிலும் நாம் மனிதரை ஆத்மா எனக் கருதுகிறோம்.
- திருடனுடைய அடி திருவடி என்பது ஆன்மா முழுவதும் மறைந்த நிலையிலும் அந்த ஆன்மாவால் உந்தப்பட்டு (unconsciously) திருடன் செயல்படுவதால், அவன் அறியாத ஆத்ம செயலை பக்தர் அறிந்து போற்றுவதால் அவனுடைய அடி பக்தனுக்குத் திருவடியாகிறது.
- சகதியும், சேறும் குழந்தை அதில் விளையாடும்பொழுது பக்தனுக்கு அழுக்காகத் தோன்றாமல் பிரம்மமாகத் தோன்றுகிறது.
- பிரம்மப் பார்வைக்கு விபசாரியின் செயல் விலை மதிக்க முடியாத கற்புடையது.

***

## II/22) சமூகக் கட்டுப்பாட்டையும், உள்ளத்தின் பொன்னான உணர்வுகளையும் மீற முடியாதவனுக்கு அன்னையின் ஆன்மீகச் சுதந்தரத்தை அனுபவிக்க முடியாது.

☆ **சமூகத்தையும் மனச்சாட்சியையும் கடந்தது ஆன்மீகச் சுதந்தரம்.**

- மனிதன் தனிப்பட்டவனில்லை, சமூகத்தின் அங்கம்.
- கை, கால் உடலின் பகுதியாக இருப்பதைப் போல் மனிதன் சமூகத்தின் அங்கமாக இருக்கிறான்.
- நாம் எழுந்து நடந்தால் கை உடன் வர மறுக்க முடியாது.
- உடலுக்குக் காய்ச்சல் வந்தால், காலோ, கையோ, விலகியிருக்க முடியாது.
- சமூகம் வளர்ந்து, முதிர்ச்சியடைந்தபின், மனிதன் அதனின்று பிரிந்து வேறுபடுகிறான்.
- இது பாலைவனச் சோலை போன்றது, அரிது. முதிர்ந்த சமூகத்தில் முதிர்ந்த மனிதன் அது.
- அவனுடைய தலைமையை சமூகம் ஏற்கும்.
- அவனால் சமூகத்தை அதன் பாதையினின்றும் திருப்ப முடியும், எதிராகப் போகச் சொல்ல முடியும்.
- அவன் தலைவன், தலைமைக்குத் தகுதியுள்ளவன், தனித்தன்மையுடையவன்.
- அவனை individual எனக் கூறுகிறோம். தனித்தன்மை படைத்தவனே மனிதன்.
- அன்னை சமூகத்தைக் கடந்தவர்.
- மனச்சாட்சி சமூகத்தைக் கடந்தது.
- அன்னை மனச்சாட்சியையும் கடந்தவர்.
- மனச்சாட்சி பொன் விலங்கு என்பவர்.



- ஊரில் பெரியவன் தவறு செய்தால், எவரும் எதிர்த்து சாட்சி கூறப் பயப்படுவார்கள்.
- அவர்கள் அடி, உதைக்குப் பயந்து அடங்குபவர்கள்.
- பெரிய மனிதன் செய்தது சரி, அவன் செய்த தவறும் சரி என்பவருண்டு.
- அவர்கள் மனச்சாட்சியில்லாதவர். அவர்கள் ஊருடன் ஒத்துப் போகும் மனிதர்கள்.
- மனச்சாட்சி பயப்படாது.
- தனித்து நிற்கும் தைரியம் உடையது.
- அவர்களை மனித குல மாணிக்கம் என்பார்கள்.
- மனச்சாட்சி தர்ம சங்கடத்தில் கொண்டு விடும் நேரம் உண்டு.
- உள்ளதைச் சொன்னால் ஊர் பற்றி எரியும் நேரம் உண்டு.
- தர்மபுத்திரரை ஆண்டவன் பொய் சொல்லச் சொன்னான்.
- அவர் மனச்சாட்சி உறுத்தியது.
- ஆண்டவனுக்கு அடங்கி பொய் சொன்னார்.
- அப்படியும் தேர்ச் சக்கரம் இறங்கியது.
- திரௌபதி மானத்தைக் காக்க அவரால் முடியவில்லை.
- ஐந்து கணவன்களும் “ஊருக்கு” அடங்கினர்.
- மனச்சாட்சியை மீறி அடங்கினர்.
- பெண் மானத்தைக் காப்பாற்ற முடியவில்லை.
- அந்த நேரம் மனச்சாட்சி பொன் விலங்காகும்.
- பெண்ணின் மானம் பறிபோவதை தர்மமோ, மனச்சாட்சியோ காப்பாற்ற முடியவில்லை.

  ஆண்டவன் காப்பாற்றினான்.
- ஊரைவிட மனச்சாட்சி உயர்ந்தது.
- மனச்சாட்சியைவிட தர்மம் உயர்ந்தது.

- தர்மம் தலை காக்கும் என்றனர்.
- தருமபுத்திரர் தலையை அத்தர்மம் காக்கவில்லை.
- அதைக் கடந்து தலையைக் காக்கும் தர்மம் உண்டு.
- அந்தத் தர்மப்படி தருமர் பொய் சொன்னார்.
- அந்தத் தர்மப்படி அர்ஜுனன் போரிட இசைந்தான்.
- கொலை ஆண்டவனுக்குத் தவறில்லாத நேரம் உண்டு. அவன் கொலை செய்யச் சொல்வதை மனிதன் ஏற்காவிட்டால் 100 கொலை விழும் என்று பகவான் கூறுகிறார்.
- ஊரையும், மனச்சாட்சியையும், தலையைக் காக்காத தர்மத்தையும் கடந்து ஆண்டவன் சொல்லை ஏற்பவன் அன்பன்.

***

### II/23) கட்டுப்பாட்டை ஏற்றுக் கொண்டு கம்பளிப் பூச்சி போல் கூட்டிலிருக்கும் நிலையில் சட்டத்தை மீறினால் அது முழு அழிவைத் தரும்.

☆ **சட்டம் கட்டுப்பாட்டுக்குரியது.**

- விலங்கு வாழ்வு நாகரிகமான மனித வாழ்வாக மாறியது கட்டுப்பாட்டால்.
- ஊருக்குக் கட்டுப்பாடுண்டு. அதை சட்டம் என அறிவோம்.
- உலகத்திற்கும் அது போன்ற சட்டம் உண்டு.
- சமூகத்திற்குரிய கட்டுப்பாட்டுக்கு தர்மம் எனப் பெயர்.
- மனம் ஏற்கும் கட்டுப்பாட்டிற்கு மனச்சாட்சி எனப் பெயர்.
- எந்த காரியத்தைச் சாதிக்கவும் அதற்குரிய கட்டுப்பாடுண்டு.
- நியாயம் பெற கோர்ட்டுக்குப் போகிறோம்.



- கோர்ட்டில் நியாயம் பெற கோர்ட்டார் உத்தரவுக்குக் கட்டுப்பட வேண்டும்.

  அவர்கள் கேட்கும் தஸ்தாவேஜைக் கொடுக்க வேண்டும்.

  கோர்ட் கூப்பிடும்பொழுது போக வேண்டும்.

  நம் பக்கம் நியாயமிருந்தாலும் டாக்குமெண்ட், சாட்சியிருப்பவையே செல்லும்.

  கோர்ட்டிற்குப் போனபின் வக்கீலுக்குக் கட்டுப்பட வேண்டும்.

  வக்கீலை மீறி நடந்தால் கேஸ் ஜெயிக்காது.

  உண்மையிருந்தாலும், அத்தாட்சியில்லாமல் கோர்ட் நியாயம் வழங்காது.

  கோர்ட் தீர்ப்பு கொடுத்தபின் அதற்குப் பணிய வேண்டும்.

  கோர்ட்டார் தீர்ப்பை எதிர்க்கும் உரிமை நமக்கில்லை.

  ஏற்க மறுத்தால் அப்பீலுக்குப் போகலாம்.

  கோர்ட்டில் நாம் பதிவு செய்த எந்த பத்திரத்தையும் எதிரிக்குப் பார்க்கும் உரிமையுண்டு.

  அனைவருக்கும் பார்க்கும் உரிமையுண்டு.

  'என் பத்திரத்தை எவரும் பார்க்கக் கூடாது' எனக் கூற முடியாது.

  அது கட்டுப்பாட்டை மீறுவதாகும்.
- பிறந்ததிலிருந்து சாகும்வரை, பிணமான பின்னும் கட்டுப்பாடு அதன் அதிகாரத்தைச் செலுத்தும்.
- கட்டுப்பாட்டுக்குக் கட்டுப்படுவது அதற்குரிய சுதந்திரத்தை அனுபவிப்பது.
- எந்த கட்டுப்பாட்டை மீறினாலும் எல்லாம் போய்விடும்.
- கட்டுப்பாட்டுக்கு வெளியே வருவது கட்டுப்பாட்டை மீறியதாகாது.
- கட்டுப்பாடு உயர்ந்த பலன் தரும்.

- அதை விட்டு வெளியே வருபவர்க்கு உன்னதமான பலன் உண்டு.
- காங்கிரஸ் கட்சியினர் 1947இல் பதவிக்கு வந்தனர்.
- மகாத்மா கட்சியை விட்டு வெளியேறியவர்.
- அவருக்குப் பதவியில்லை, தலைமையும், அதற்குரிய பிரபலமும் உண்டு.
- கல்லூரியில் படித்தால் பட்டம் உண்டு.
- தாகூர் படிப்பை விட்டு வெளியேறினார், நோபல் பரிசு பெற்றார்.
- கட்டுப்பாடு கம்பளிப்புழுவை, பட்டாம்பூச்சியாக்கும்.
- அதனால் கட்டுப்பாடு உயர்ந்தது.
- கட்டுப்பாடு (finite) சிறியதற்குரியது, சிறியதைப் பெரியதாக்க வல்லது.
- கட்டுப்பாட்டை மீறுவது ஆபத்து. ஓடும் ரயிலிலிருந்து இறங்குவது போல்.
- கட்டுப்பாட்டை விட்டு நாமே வெளியே வருவது (infinite) பெரியதற்குரியது.

  பெரியது கட்டுப்பாட்டை விலக்கினால் உயர்ந்ததாகும்.
- அது அரிபொருள்.
- அன்னை அரியதை அனைவருக்கும் தருகிறார்.

*தொடரும்....*

❋❋❋

**ஜீவிய மணி**

**கெட்டதில் விரும்பி சிக்குபவன் நல்லதை மறுப்பான்.**



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

**46. ஒரு துறையில் உள்ள வல்லுநர்களைக் கடந்த சாரமான விஷயம்.**

- அன்னை ஜீவியமிருந்தால் அன்பர் பிற துறைகளில் செயல்பட்டால், அத்துறை வல்லுநர்களைக் கடந்த ஞானம் அவருக்கு எழும்.
- அன்பர் வக்கீலிடம் சென்றால், தன் வழக்கைப் பற்றி வக்கீலைவிட சட்ட நுணுக்கம் அறிவார்.
- துறை வல்லுநர் பெற்றது துறைக்குரிய ஞானம்.
- **அன்பர் பெற்றது வாழ்வு ஞானம்.**
- துறை வாழ்வின் பகுதி.
- வல்லுநர் பெற்றது அனுபவ ஞானம்.
- அன்பருக்குள்ளது ஆத்ம ஞானம்.
- ஆத்ம ஞானம், அனுபவ ஞானத்தைவிடப் பெரியது.
- 6 டாக்டர்கள் ஒரு இளைஞரை சோதனை செய்து T.B. எலும்புருக்கி நோய் என முடிவு செய்தனர்.
- பேஷண்ட் எக்ஸ்ரே எடுத்து, எக்ஸ்ரே எக்ஸ்பர்ட்டிடம் காட்டினார்.
- T.B. உறுதியாயிற்று.
- அன்பருக்கு விஷயம் தெரிய வந்தது.
- T.B.க்குரிய அறிகுறிகளை டாக்டர்கள் கண்டனர் - வயிற்றுப்போக்கு.

* அன்பர் ஞானம் வாழ்வின் முழுமையை அறியும்.
* வியாதிஸ்தர் கால்பந்து விளையாடியதைக் கண்டார்.
* T.B. என்பது தெம்பை அழிக்கும் வியாதி.
* அது இருந்தால் கால்பந்து விளையாட முடியாது.
* இந்த வியாதிஸ்தர் நண்பர்கட்கு இரகஸ்ய உறைவிடம். Conscience-keeper.
* எல்லா நண்பர்களும் இவரை உறுதியாக நம்புவதால் எல்லா இரகஸ்யங்களையும் கூறுவார்கள்.
* **இரகஸ்யங்களை வெளியிட முடியாத செயல்கள் - ஆபாசமானவை.**
* அனைவருடைய ஆபாசமும் இவரிடம் பத்திரமாக இருந்தன.
* அவற்றின் சூட்சும மையம் வயிறு.
* அதுவே வயிற்றுப்போக்குக்குக் காரணம்.
* வியாதிஸ்தர் தாம்பரம் சானடோரியம் சென்று சோதித்தார்.
* T.B.யில்லை என பதில் வந்தது.
* 6 டாக்டருக்குப் புலப்படாத காரியம் அன்பருக்குப் புலப்பட்டது.
* அதுவே அன்னை ஜீவியம் தருவது.
* இது உள்ள அன்பருக்கு யோகம் பலிக்கும்.
* யோகத் தகுதியிருப்பதால், யோகம் செய்ய முன்வரும் வழக்கமில்லை.
* இந்த அன்பர் யோகத்தை மேற்கொண்டால், இவருக்கு யோகம் பலிக்கும்.
* துறை வல்லுநர்களைவிட அன்பருக்குப் புரிவது, அன்பர் அன்னை ஜீவியத்தை ஏற்று, ஆத்ம விளக்கம் பெற்றவர் எனக் காட்டுகிறது.



* ஆத்ம விளக்கம் யோகத் தகுதி.
* ஓட்டுப் போட உரிமையுள்ளவர் அனைவரும் M.L.A.யாக நிற்கலாம்.

நிற்பவர் அனைவரும் ஜெயிக்க முடியாது.

ஒரு கட்சி, ஒரு ஜாதி, ஒரு ஊர் ஓட்டு முழுவதும் ஒருவருக்குக் கிடைக்குமானால், அவருக்கு M.L.A. எலக்ஷனில் வெற்றி பெறும் வாய்ப்புண்டு எனக் கூறலாம்.

தொடரும்.....

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பழைய குற்றங்களை மனமாற்றமிருந்தால் மன்னிக்க முன் வருபவன், அக்குற்றங்களை எழுப்பிய தன் மனநிலை மாற வேண்டுமென நினைப்பதில்லை.

***குற்றத்தை மன்னிப்பவனும், மூலத்தைக் கருதுவதில்லை.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உண்மையில் விஷயம் உயர்ந்தது. ஒரு நிலையிலிருக்கும் பொழுது அங்கு சாதிக்க நினைத்தால், தோற்றத்தைவிட விஷயம் முக்கியம்.

***அஸ்திவாரம் பலப்பட தோற்றத்தைவிட விஷயம் முக்கியம்.***

# வாழும் தெய்வங்கள்

இல. சுந்தரி

“சார், யார் வீட்டில்?” என்று கேட்டவாறு அழைப்பு மணியைத் தேடியும், கதவைத் தட்டியும் அவ்வீட்டிலுள்ளவரை அழைக்க முயன்றார் அவர். பேண்ட், ஷர்ட் அணிந்திருந்தார். கண் கண்ணாடி அணிந்திருந்தார். நாற்பது வயதிருக்கும். கையில் ஒரு அட்டை பைலில் நீண்ட நோட்புக் ஒன்று வைத்திருந்தார். ஒருவாறு அழைப்பு மணியைத் தேடிக் கண்டுபிடித்து, கம்பி கேட்டுக்குள் கை வைத்து மணியை ஒலித்தார்.

வெளியே வந்த கல்பனா என்ற அந்த வீட்டுப் பெண்மணி நாற்பது வயதினர். கேட்டைத் திறந்து, “உள்ளே வாருங்கள். நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று அமைதியாகக் கேட்டார்.

‘‘அரசாங்க அலுவலர் நான். ஜனத்தொகை கணக்கெடுப்பு நடக்கிறதல்லவா, இந்த வார்டில் நான் கணக்கெடுக்க வேண்டியுள்ளது. வீட்டில் உள்ளவர் எத்தனை பேர் என்று சொல்லுங்கள்'' என்றவர் பைலை பிரித்து, நோட்டை எடுத்து, கதவெண் சரி பார்த்து, வைத்துக் கொண்டார்.

“இந்த வீட்டில் நாங்கள் மூன்று பேர் இருக்கிறோம்” என்றாள் கல்பனா.

“அதே பழைய எண்ணிக்கைதானா?” என்று தம் கையிலுள்ள ஏட்டைப் பார்த்து, பழைய கணக்கெடுப்பில் உள்ள விபரங்களின்படி உள்ளதைக் கண்டு தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.



“சரி, உங்கள் வயது, பெயர் சொல்லுங்கள்” என்றார்.

“பெயர் கல்பனா, வயது நாற்பத்திரண்டு” என்றாள்.

‘‘பரவாயில்லை, பெண்கள் வயதைக் குறைத்துச் சொல்வார்கள் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் அதிகமாகச் சொல்கிறீர்கள் போலிருக்கிறது'' என்று அவள் இளமையை மறைமுகமாகப் பாராட்டினார். அவரே மேலும் தொடர்ந்தார்.

“உங்கள் கணவர் பெயர் குருமூர்த்தி, வயது நாற்பத்தெட்டு. உங்கள் மகள் மணிமேகலை, வயது 24, சரிதானே?” என்று பழைய லிஸ்டில் உள்ள பெயரையும், ஐந்து வயது கூட்டிய கணக்கையும் சொன்னார்.

“உங்கள் கணக்கு சரிதான். ஆனால், அவர்கள் இப்பொழுது லிஸ்டில் இல்லை. என் கணவர் இறந்துவிட்டார் (அவள் நெற்றியில் உள்ள கருஞ்சாந்துப் பொட்டைப் பார்த்து, பார்க்காத பாவனைக்கு மாறுகிறார்). என் மகள் மணமாகி, கணவன் வீடு போய்விட்டாள்” என்றாள் கல்பனா.

‘‘அப்படியென்றால் நீங்கள் மட்டும்தான் இந்த வீட்டில் வசிக்கிறீர்களா?” என்றார் வந்தவர்.

‘‘இல்லையில்லை, நாங்கள் மூவர் இந்த வீட்டில் வசிக்கிறோம்” என்றாள் கல்பனா.

‘‘அப்படியா, சரி, சரி, மற்ற இருவர் வயதும், பெயரும் சொல்லுங்கள்” என்றார்.

‘‘அவர்கள் இந்தக் கணக்கெடுப்பில் சேரமாட்டார்கள்'' என்றாள் கல்பனா.

“உங்களுடன் இருக்கும் உறவினர்களில்லையா அவர்கள்? தற்காலிக விருந்தாளிகளா?” என்று சிரித்துக் கொண்டே கேட்டார் கணக்கெடுப்பவர்.

‘‘இல்லையில்லை. அவர்கள் விருந்தினரோ, தற்காலிக-மானவர்களோ இலர். நிரந்தரமாய் என்னுடன் இருப்பவர்கள்தாம்” என்றாள் மெல்லிய புன்னகையுடன்.

‘‘அவர்களோடு உங்களுக்கு என்ன உறவு என்று சொல்லலாமா....” என்றார் தயங்கியவண்ணம்.

“நிச்சயமாகச் சொல்லலாம். நீங்கள் கேட்டதில் தவறொன்று-மில்லை. அவர்கள் என் தாயும், தந்தையும்தான்” என்றாள்.

‘‘சரிதான், பிள்ளைகளால் கைவிடப்பட்டு பெண்ணுடன் தங்கும் பெற்றோரா? அப்படியென்றால் பிள்ளைகள் வீட்டுக் கணக்கில் அவர்கள் பெயர் சேர்க்கப்பட்டுவிட்டது என்று சொல்லுங்கள்” என்றார் சுவாரஸ்யமாக.

‘‘நீங்கள் நினைப்பது போல் அவர்களை யாரும் கைவிடவில்லை. அவர்களை விடவும் முடியாது. ஒன்றிரண்டு பிள்ளைகளென்றால் பரவாயில்லை, பல பேர் பிள்ளைகள். என் நச்சரிப்புத் தாங்காமல் என்னுடன் இருக்கிறார்கள்’’ என்றாள் கல்பனா.

‘‘அப்படியென்றால் அவர்களுக்குத் தனி ரேஷன் கார்டு என்று சொல்லுங்கள்” என்றார் மேலும் சுவாரஸ்யமாய்.

“சொன்னால் நம்பமாட்டீர்கள், அவர்கள் வாக்கெடுப்பதிலும் கலந்துகொள்வதில்லை, ரேஷன் பொருளும் தேவையில்லை. அதனால் அவர்கள் எந்தக் கணக்கிலும் வருவதில்லை’’ என்று நயமாய் நிதானமாய்ச் சொன்னாள் கல்பனா.

“என்னம்மா இது? இத்தனை நாளும் கார்டில் இல்லாமல், கணக்கில் வராமலா இருக்கிறார்கள்?’’ என்றார் கண்டிக்கும் தோரணையில்.

‘‘ஆமாம், இதுவரை அப்படித்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள்” என்றாள் இயல்பாக.

“யாரும், எதுவும் சொல்வதில்லையா?” என்றார் சந்தேகமாக.



‘‘அவர்களைப் பார்க்க வேண்டும் என்பார்கள். இயலாது என்று நான் எவ்வளவு தடுத்தாலும் பிடிவாதம் செய்து பார்ப்பார்கள். பார்த்த பிறகு எதுவுமே பேசாமல் போய்விடுகிறார்கள்” என்றாள்.

வந்தவருக்கு ஒரு மாதிரியாயிருந்தது. சற்று நிதானமாக, அதே சமயம் ஜாடையாக கல்பனாவைப் பார்த்தார்.

கல்பனாவுக்குச் சிரிப்பு வந்தது. அவர் குழம்பிவிட்டார் என்று புரிந்தது. நமுட்டுச் சிரிப்புடன் பேசாது நின்றாள்.

‘‘மிகத்தள்ளாதவர்களோ? அவர்களுக்கு என்ன வயதிருக்கும்?” என்றார் மிகுந்த தயக்கத்துடன்.

“சொல்வேன், சொன்னால் உங்களுக்கு அதிர்ச்சியாயிருக்கும்” என்றாள்.

“என்னம்மா புதிர் போடுகிறீர்கள், நூறு வயதை நெருங்கி-விட்டார்களா?” என்றார் சற்று சலிப்புடன்.

‘‘நூற்றாண்டைக் கடந்தவர்கள். அம்மாவின் வயது 126; அப்பாவின் வயது 132” என்று மிகவும் இயல்பாகச் சொன்னாள்.

‘‘என்னம்மா இது? இறந்துபோன உங்கள் பெற்றோரின் வயதைக் கூறுகிறீர்களா? நீங்கள் நார்மலாகத்தானே இருக்கிறீர்கள்?’’ என்று கேட்டவண்ணம் மெல்ல எழுந்து கொண்டு, தமக்குத் தாமே ‘நான் சரியான நபரிடம்தான் பேசிக் கொண்டிருக்கிறேனா?’ என்று முனகினார்.

கல்பனாவிற்கு அவர் குழப்பம் புரிந்தது. தன் சிரிப்பை வெளியிடாமல், “நீங்கள் நினைப்பது போல் நான் மெண்டல் கேஸ் இல்லை. உள்ளதைத்தான் சொல்கிறேன்” என்றாள் சகஜமாக.

மீண்டும் இருக்கையில் அமர்ந்தார். அவளை இலேசாகக் கவனித்தார். எத்தனை தெளிவான முகம், குழப்பமில்லாத பேச்சு. நிச்சயம் இவள் மெண்டலாக இருக்க முடியாது என்று உறுதி செய்து கொண்டார்.

''படுத்த படுக்கையாய் நோய்வாய்ப்பட்டு பார்க்கப் பரிதாபமாய் இருக்கிறார்களா?"

''அதெல்லாம் ஒன்றுமில்லை. அவர்கள் நோய் தாக்க முடியாத அளவு நன்றாகவேயிருக்கிறார்கள். அவர்கள் பூரணப் பாதுகாப்பில் தானே நானே இருக்கிறேன்'' என்றாள் கல்பனா. தன் பெற்றோரின் பெருமிதம் அவள் பேச்சில் தெரிந்தது.

'என்ன விந்தை மனிதர்கள் இவர்கள்!' என்று அவர் மனம் அதிசயித்தது. வந்த வேலையும் மறந்துபோனது. "அடடா! என்ன ஆச்சர்யம். பிறக்கும்போது நோயுடன் பிறக்கின்ற இந்த நாளில் இப்படிப்பட்ட அசாதாரண மனிதர்களா! அப்படியென்றால் யாரேனும் அவர்களைக் காணவும், செய்தி சேகரிக்கவும் வந்தவண்ண-மிருப்பார்களே. T.V.க்காரர்கள் விட்டுவைக்கமாட்டார்களே'' என்றார் பரபரப்பாக.

"அதையேன் கேட்கிறீர்கள்! அவர்களைப் பற்றிய செய்தி சிதம்பர ரகஸ்யம்தான். விஜய் T.V., ஜெயா T.V., விண் T.V.காரர்களும் அவர்களைப் பற்றி ஒளிபரப்பிக் கொண்டுதானிருக்கிறார்கள்" என்றாள் கல்பனா.

ஏறக்குறைய வந்தவர் சுவாமி தரிசனத்திற்குத் தயாராகும் பக்தராகிவிட்டார்.

"அவர்களுடன் நான் பேச முடியுமா?" என்றார் வந்தவர்.

"முடியும். ஆனால், அவர்கள் பேசுவது உங்களுக்குப் புரிய வேண்டுமே" என்றாள்.

"ஏன், தெளிவாகப் பேசமாட்டார்களோ?" என்றார் கனிவாக.

"மிகத்தெளிவாகப் பேசுவார்கள். ஆனால், அது உங்களுக்குப் புரிய வேண்டுமே" என்றாள்.

"என்னம்மா, ஒரே புதிர் மேல் புதிர் இட்டுப் பேசுகிறீர்கள்? அவர்கள் தெளிவாய்ப் பேசினால் எனக்கெப்படிப் புரியாமல் போகும்?" என்றார்.



"அதுதானே பெரிய விஷயம். அவர்கள் வார்த்தைகளால் பேசமாட்டார்கள். விழிகளால் பேசுவார்கள். எனக்குப் பழகிவிட்டது. ஆனால், வருவோரில் பலருக்குப் புரிவதில்லை" என்றாள்.

''அவர்கள் எப்படியிருந்தாலும், எப்படிப் பேசினாலும் பரவாயில்லை. எனக்கு அவர்களைக் காண மிகவும் ஆர்வமாகி-விட்டது".

''அவர்களைப் பார்க்கலாம். ஆனால், அவர்களைப் பார்ப்பதற்கு ஏற்றவர்களாக இருக்க வேண்டுமே என்பதுதான் என் கவலை" என்றாள்.

''ஏற்றவர்களாக என்றால், வயதானவர்களாய் இருக்க வேண்டும் என்கிறீர்களா?" என்றார் வந்தவர்.

"வெறும் வயது நிறைந்தால் போதாது, மனம் நிறைந்திருக்க வேண்டும்'' என்றாள். ''பொய் பேசுபவர்களுடன் அவர்கள் பேசமாட்டார்கள். மனத்தூய்மை இல்லையென்றாலும் அவர்களுக்குப் பிடிக்காது. உங்களைப் பற்றி எனக்கெதுவும் தெரியாதே, அதனால்தான் யோசிக்கிறேன்" என்றாள்.

''என் மனம் தூய்மையானதுதான். லஞ்சம், ஊழல் ஏதுமில்லை. ஆனால் மேடம், வாழ்க்கையில் பொய் சொல்லாமல் எப்படி வாழ முடியும்? மனமில்லாமலேயே சில பொய்களைச் சொல்லிவிடுவேன்" என்றார் உருக்கமாக.

தன்னை ஒப்புக்கொள்ளும் நேர்மை அவரிடமிருந்ததைக் கவனித்தாள் கல்பனா.

"உண்மையாகவே நீங்கள் பொய் சொல்ல விரும்பவில்லை-யென்றால் பொய் சொல்லும் சந்தர்ப்பமே வராமலிருக்க அவர்களால் உங்களை ஆசிர்வதிக்க முடியும்" என்றாள்.

"அப்படியா? அது போதுமம்மா. எனக்கு அதுவே போதும். நான் கட்டாயம் அவர்களைப் பார்த்து ஆசி பெற வேண்டும்'' என்றார் தீர்மானமாக.

‘‘சரி, நீங்கள் பிடிவாதமாயிருப்பதால் அவர்களிடம் அழைத்துப் போகிறேன். அவர்கள் சதா தியானத்திலிருப்பவர்கள். நீங்கள் அதற்கு இடையூறு செய்யக்கூடாது. மேலும் பார்த்த பிறகு, இவர்கள்தானா என்று என்னைக் கேட்கக் கூடாது’’ என்றாள்.

மேலும் குழப்புகிறாயே. நிச்சயமாக இவள் நல்லவளா, பைத்தியமா? இவளை நம்பி, இவள் இருப்பதாகச் சொல்லும் இவள் தாய், தகப்பனைக் காணப் போவது சரியா? என்று உள்ளே குழப்பம் வந்தாலும், காணும் ஆர்வம் அதை அடக்கி மேலெழுந்தது.

“நான் எதுவும் சொல்லமாட்டேன். அவர்களைப் பார்த்தால் போதும்” என்றார்.

‘‘சரி, அவர்கள் மேலே (மாடியில்) இருக்கிறார்கள். அமைதியாக என்னைத் தொடர்ந்து வாருங்கள்” என்று கூறி, ஒலி எழுப்பாமல் அடக்கமாக மாடிப்படியேறினாள்.

அவரும் தொடர்ந்து சென்றார். ஒரு சிறிய அறையின் கதவின் முன் நின்று மௌனமாக கண் மூடி சிறிது நின்று, பிறகு கதவுகளைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, கதவுக்கு வலிக்குமோ என்பது போல் மிகமென்மையாகத் திறந்தாள்.

பளிங்குக் கற்கள் பதித்த அறையில் சுத்தமும், அமைதியும், மலர் மணமும், பத்தியின் நறுமணமும் இவர்களை வரவேற்றன. நடு மண்டபத்தில் கொலுவிருந்தவர் யார்?

ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரல்லவா!

அவள் தன்னை எதுவும் கேட்கக் கூடாது என முன்பே கூறிவிட்டதால் கேட்க முடியவில்லை. விழிகளால் பேசினர். “வா மகனே!’’ என்று அவருக்குப் புரிந்தது. விழுந்து நமஸ்கரித்து, விழிநீர் பெருக, ஏதும் பேசாது வெளியேறிவிட்டார் வந்தவர்.

*முற்றும்.*

❋❋❋





## *Page 514* Even the objective is understood as subjective experience

### புறம் எனக் காண்பதையும் அகத்தின் அனுபவமாக ஏற்கிறோம்

- அகம், புறம் தத்துவம். யோகத்தில் முக்கிய பகுதி.
- காலம் அகம், இடம் புறம்.
- செயல் புறம், எண்ணம் அகம்.

நாம் செயல் என புறத்தில் காண்பதும் எண்ணமாக மனம் ஏற்றதாகும்.

நாம் விலக்குபவை நம் மனம் ஆழ்ந்து ஏற்பதாகும்.

ஒரு மகனை விலக்கி, அடுத்தவனை ஆதரிக்கும் தகப்பனாரின் ஆழ் மனம் வலிமையாக விலக்குபவன் மீதிருக்கும். குண விசேஷத்தால் விலக்கினாலும் மனம் ஆழத்தில் விலக்குவது தவறு என நினைந்துருகும். கடைசியில் தகப்பனார் வேண்டிய பிள்ளைக்குச் செய்ய விரும்பியது அனைத்தும், செய்ததும் உருப்படாமல் போய், விலக்கிய பிள்ளை வாழ்வில் பலிப்பது அனுபவம்.

சஞ்சய் காந்தியைப் பாராட்டி, ஆதரித்து, அவரைப் பிரதமராக்க இந்திரா முயன்றார்.

ராஜீவ் புறக்கணிக்கப்பட்டார்.

சஞ்சய் மறைந்தார், ராஜீவ் பிரதமரானார்.

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் முதல் மகனுக்குப்

பட்டம் கட்டினார், பாராட்டினார். அவர் இரண்டாம் மகன் சிதம்பரம் செட்டியார் தமிழ்நாட்டில் பெரிய தொழிலை நிறுவினார், பிரபலமானார். 3 தலைமுறைகளாக சிறப்பாக இருக்கிறார். முதல் மகன் வம்சம் இருந்த இடம் தெரியவில்லை.

- மகாத்மா காந்தி அஹிம்சையை ஏற்றார், பாராட்டினார், ஹிம்சையை ஒதுக்கினார். 1943இல் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியில் 'இந்தியா சுதந்தரம் பெற்றவுடன் இராணுவத்தைக் கலைக்க வேண்டும்' என ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். தீர்மானம் ஏகமனதாக நிராகரிக்கப்பட்டது. சுதந்தரம் வருமுன் காந்திஜி விலக்கிய ஹிம்சை தலைவிரித்தாடியது. தன் தவற்றை காந்திஜீ ஏற்றார். தவற்றை ஏற்கும் தைரியம் தைரியங்களில் தலையானது.
- சர்ச்சில் இந்தியாவுக்குப் பரம விரோதி. பெரும் வீரர். இந்திய சுதந்தரத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். என் வாழ்நாள் உள்ளவரை அதை ஏற்க முடியாது எனப் பேசினார். உலகப் போர் வந்தது. பிரிட்டன் நிலைகுலைந்த நேரம். சர்ச்சில் பதவியிலில்லை. சர்ச்சில் மட்டுமே நாட்டைக் காப்பாற்ற முடியும் என மக்கள் கருதி, சர்ச்சிலை மந்திரி பதவியில் அமர்த்தினர். ஹிட்லர் லண்டனைத் தாக்கினார். சர்ச்சில் பிரதமரானார். போரை வென்றார். அவர் மனம் இந்திய விடுதலையை எதிர்க்கிறது. உலகப் போர் தோற்றுப் போனால் உலகில் ஜப்பானுடைய ஏகாதிபத்தியம் ஏற்பட்டு, 500 ஆண்டிருக்கும் என்றார் பகவான். உலகப் போரில் இங்கிலாந்திற்கு உதவ அமெரிக்கா இந்தியாவுக்குச் சுதந்தரம் தர சர்ச்சிலை வற்புறுத்தினார்.

  இந்திய விடுதலையை மனம் எதிர்க்கலாம்.
  உலகப் போரை அதே மனம் வெல்லும்.



உலகப் போரை வெல்வது இந்தியாவுக்குச் சுதந்தரம் வழங்குவது எனச் சர்ச்சில் மேல் மனம் அறியவில்லை.

- நான் பாட்டிலைத் தொடமாட்டேன் என அடிக்கடி கூறுபவர் ஒருபோதும் குடிக்காவிட்டாலும் அவர் மனம் முழுவதும் பாட்டில் மீதிருப்பதை மறைமுகமாகக் கூறுகிறார்.
- பார்வைக்குப் புறம், ஆழ்ந்து கவனித்தால் அதுவே அகம்.

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**ஒருமைக்கு முந்தைய நிலைகள் சுமுகம், முரண்பாடு.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**பிறரை மன்னிக்க எழும் பெருந்தன்மை தன்னை மாற்ற உதவுவதில்லை.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மனதில் அடக்க முடியாதது சமத்துவத்தை நாடினால் அவற்றின் புற வடிவங்களான வக்ரமும் சுயநலமும் தன்னை நாடி வருவதில்லை எனக் காணலாம்.

***அடங்கிய மனதை சுயநலம் மறக்கும்.***

## அன்பர் கடிதம்

***அருளுக்கு சமுதாயமும், வாழ்வும், காலமும் கட்டுப்பட்டு நிற்கும் என்ற அப்பாவின் கருத்தை கொண்டு எழுதிய வரிகளை கீழே பதிவு செய்கிறேன்.***

வாழ்க்கை என்னும் மைதானத்தில்,

ஆண்டவன் என்னும் அம்பயரின் முன்னிலையில்,

சமுதாயம் பல சோதனை பந்துகளை தொடர்ந்து வீசுகிறது,

சுற்றிலும் பல பிரச்சனை பீல்டர்கள் வியூகம் அமைத்திருக்க,

சீறிவரும் பந்துகளில் மனிதர்களின் வாழ்நாள்.

வாழ்வின் எல்லைக்குள் அடைபட்டிருப்பவர் விக்கெட்டுகள் வரிசையாய் சரியும்போது,

அன்னை அன்பர்களாகிய நாங்கள் மட்டும் நம்பிக்கை மட்டையுடன்,

*அருளின் பாதுகாப்பிலிருந்து விலகாமல் இருந்து கொண்டு, அனுதினமும் சதம் போடுகிறோம்.*

*-- பிரியா மகேஷ், ஷார்ஜா.*

❃❃❃

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**ஜோதி தன்னை விழுங்குவதால் இருளாகிறது.**

**ஜீவியம் அதேபோல் ஜடமாகிறது.**

**இறைவன் பிரிவினையால் திசை மாறி அசுரனாகிறான்.**

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# மோட்டர் பைக்

நடிகர் ஒருவர் தன் மோட்டர் பைக்கை விற்றுவிட்டு புது வண்டி வாங்கினார்.

புது வண்டியை வாங்கியவர் ஒரு விபத்துக்குள்ளானார்.

வண்டி சேதமாயிற்று.

நடிகரை அணுகி நடந்ததைக் கூறினார்.

அவர் வந்து சேதமான வண்டியைப் பார்த்தார்.

''நான் உனக்கு உண்மையாக ஊழியம் செய்தேன். என்னையும், என் சேவையையும் மறந்து, என்னை விற்றுவிட்டதால் நான் சாகப் பிரியப்பட்டுத் தற்கொலை செய்து கொண்டேன்'' என்று வண்டி கூறியது போல் நடிகருக்குப் பட்டது.

அவர் அவ்வண்டியை எடுத்து ரிப்பேர் செய்தார்.

தன் காரேஜில் வைத்தார்.

அதன் பிறகு அவர் பல வண்டிகள் வாங்கினார்.

பல கார்கள் வாங்கினார்.

பழைய வண்டிகளை விற்பதில்லை.

அவற்றை எல்லாம் காரேஜில் வைத்திருந்தார்.

நண்பரிடம் இதைக் கூறியவர், அவரை அழைத்துப் போய் காரேஜைக் காட்டினார்.

***இத மொழி, காயா மொழி ஊர் பெயர்கள். நம் இதயம் அதைப் பெறலாம்.***

❃❃❃

# திருஷ்டி

ஆங்கிலத்தில் (evil eye) என்று சொல்லப்படுவது. இது உண்மையா எனக் கேட்க வேண்டாம் என்ற அளவுக்கு நம்மவர் அனைவருக்கும் அனுபவம் உண்டு. உதாரணம் தேவையற்றது.

* திருஷ்டிக்குப் பேர்போனவர் பலர் உண்டு.
* வளமான வாழ்வு திருஷ்டியை வரவழைக்கும்.
* நெருங்கிய உறவினர், நண்பர்கள் திருஷ்டிபடுவதுண்டு.
* முதலாளி திருஷ்டிபட்டு கெட்டுப்போன தொழில்களும் உண்டு.
* நீர் வளம் நிறைந்த ஊருக்குத் தண்ணீரில்லாத ஊர் மனிதர் வந்து வீட்டில் தங்கினால் திருஷ்டிபட்டு தண்ணீர்ப் பஞ்சமான ஊருக்குப் போக நேரும்.
* விருந்தாளி திருஷ்டிபட்டு வீட்டு வருமானம் பாதியாகக் குறைவதுண்டு; மகசூல் அழிவதுண்டு.
* **நஷ்டப்படுபவர் மனத்தால் பங்கு கொள்ளாமல் கஷ்டம் வருவதில்லை.**
* சம்பளத்தைப் போன்று மூன்று மடங்கு சம்பாதிக்கும் வீட்டிற்குச் சிறிய தாயார் வந்தார். வாய் ஓயாமல், "ஏராளமாக சம்பாதிக்கிறான் உன் பிள்ளை" எனக் கூறினார். வருமானம் 1/3 பங்காயிற்று. இது சிறிய தாயார் திருஷ்டி. அவர் திருஷ்டிக்குப் பேர்போனவர். வந்தவரிடம் அவர் தங்கச் சங்கிலியை வீட்டார் இரவல் வாங்கி பாங்கில் அடகு வைத்தனர். பின்னர் அதை மீட்டு அவரிடம் கொடுக்க முடியாமற் போய்விட்டது. அவர் இறந்துவிட்டார். அவர் நகை வீட்டாரிடம் தங்கிவிட்டதால் - தங்கப்போகிறது என்பதால் - அவர் திருஷ்டி பலித்தது. அது போன்ற பலன் பெறாமல் திருஷ்டியால் பாதிக்கப்படமாட்டார்கள்.
* பெரும்பாலும் எவர் திருஷ்டி பாதிக்கிறதோ அவர் மீது நமக்குப் பாசம், உறவு, அனுதாபமிருக்கும். அந்த உறவின்றி பார்வை பாதிக்காது.
* சமர்ப்பணம் உள்ள இடத்திற்குத் திருஷ்டி வராது; வந்தால், பாதிக்காது.
* நமக்கே பொறுக்கவில்லை என்ற அளவுக்கு 'நல்ல மனம்' உள்ளவர் உண்டு.
* அன்பருக்கு அந்த விசேஷமிருந்தால் அதற்குரிய ஆழத்து சமர்ப்பணம் அந்த இராசியை விலக்கும்.

***பிறர் தேவை பூர்த்தியாக நாம் செய்யும் பிரார்த்தனை, நமக்கு அதிர்ஷ்டம்.***

❃❃❃

Vol. I Issue 1 April 2011
RNI Title Code No. PON TAM 00407/32/1/2011-TC
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11


## புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| ESSAYS ON ACCOMPLISHMENT<br>N.Asokan | ரூ.150/- |

கர்மயோகியின்

| | |
|---|---|
| அன்னையின் ஆன்மீகப்பரிசு | ரூ.100/- |
| லைப் டிவைன் - கருத்துகள் | ரூ.100/- |
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் | ரூ.100/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| லைப் டிவைன் விரிவுரைகள்<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| SATYA JYOTHI<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191


Vol. I Issue 1 April 2011

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## ஏப்ரல் 2011